
"லக்ஸ் டாய்லட் சோப்பின்
மிருதுவான பாதுகாப்பு முறையை
30 நாட்கள் கையாளுங்கள்"
என்கிறுர்
யசோதரா கட்ஜு
LUX
TOILET SOAP
சினிமா நட்சத்திரங்கள் விரும்பும்
அழகையளிக்கும் சோப் !
LTS. 142-111-40 TM
LEVER BROTHERS (INDIA) LIMITED


சிறு சேமிப்புக்காரருக்குரிய ஒரு பிரச்னையைத் தீர்ப்பது

AC 9178



பிரச்னை : ஆறு தீக் குச்சிகளைக் கொண்டு நான்கு முக்கோணங்கள் அமைக்கவும்.

விடை : ஒரு மேஜையின்மேல் 3 தீக் குச்சிகளை ஒரு முக்கோண வடிவமாக அமைக்கவும்; மீதி மூன்றைக் கொண்டு, படத்தில் காட்டியுள்ளபடி கூர்நுனிக் கோபுரம் ஒன்றைப் பூர்த்தி செய்யவும்.



இத்தகைய பிரச்னைகள் அறிவைத் தூண்டுவதுமன்றி, ஓய்வு நேரங்களில் மகிழ்ச்சியையும், உற்சாகத்தையும் அளிக்கின்றன. ஆனால், பொருளாதாரப் பாதுகாப்பைப்பற்றிய மிகத் தீவிரமான பிரச்னையும் இருக்கிறது. இப் பிரச்னையினால் நீர் சஞ்சலம் எதுவும் அடைய வேண்டியதில்லை. எளிதில் திட்டம் போட்டுச் சேமிப்பதினால் நீர் இப் பிரச்னையைத் தீர்க்க முடியும். நாஷனல் ஸேவிங்ஸ் ஸெர்டிபிகேட்டுகளையும் ஸ்டாம்புகளையும் வாங்கி அதன் மூலமாய்த் தங்கள் பணத்தை வட்டிக்குப் போட்டு வைப்பவர்களின் கூட்டத்தில் நீர் சேர்ந்தால் வருஷந்தோறும் உமதுடைய சேமிப்பு பெருகிக்கொண்டே வருவதுமல்லாமல், உமக்குரிய பாதுகாப்பும் அதிகமாகிக் கொண்டே வரும். மேலே கண்டபடி செய்பவர்கள் தொகை நாளுக்குநாள் பெருகிக் கொண்டே வருகிறது. நாஷனல் ஸேவிங்ஸ் ஸெர்டிபிகேட்டுகள் பணத்தை வட்டிக்குப் போட்டு வைப்பதற்குரிய மிகச் சிறந்த சாதனமாகும். அவைகளிலிருந்து அதிகப்படி லாபம் கிடைப்பதோடு, அவைகளில் போட்டுவைத்த பணம் மிகப் பத்திரமாகவும் இருக்கிறது.

நாஷனல் ஸேவிங்ஸ் ஸெர்டிபிகேட்டுகள்.

இவை முக்கியமான அநுகூலங்களாகும் :—

1. நீர் நாஷனல் ஸேவிங்ஸ் ஸெர்டிபிகேட்டுகளை 5, 10, 50, 100, 500, 1,000 அல்லது 5,000 ரூபாய்க்கு வாங்கலாம்.

2. ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர்களுள் ஒவ்வொருவரும் (அவர் பெரியவராயிருந்தாலுஞ் சரி மைனராயிருந்தாலுஞ் சரி) 5,000 ரூபாய் வரையில் வாங்கமுடியும். இரண்டு பேர் கூட்டாக 10,000 ரூபாய் வரையில் வாங்கலாம்.

3. இவைகளின் மதிப்பு 12 வருஷங்களில் 50 சதவீதம் உயருகிறது. வட்டிக்குப் போட்டு வைக்கப்பட்ட ஒவ்வொரு ரூபாயும் ஒன்றரை ரூபாய் ஆகிவிடுகிறது. இது யாதொரு கவர்ன்மெண்ட் பத்திரத்தினின்றும் கிடைக்கக் கூடிய மிக உயர்ந்த வட்டியாகும்.


4. சம்பாதிக்கப்பட்ட வட்டிக்கு இன்கம் டாக்ஸ் கொடுக்க வேண்டியதில்லை.

5. இவைகளை 3 வருஷங்களுக்குப் பிறகு (5 ரூபாய் ஸெர்டிபிகேட்டுகள் விஷயத்தில், 18 மாதங்களுக்குப் பிறகு) ரொக்கமாக மாற்றிக் கொள்ளலாம்.

6. சிறு தொகைகளைச் சேர்த்து வைப்பவர்கள் 1 ரூபாய், 8 அணா அல்லது 4 அணாவுக்கு ஸேவிங்ஸ் ஸ்டாம்புகள் வாங்கலாம். இப்படி வாங்கிச் சேர்த்து வரப்பட்ட ஸ்டாம்புகளின் மதிப்பு 5 ரூபாயானதும், அவைகளைக் கொடுத்துவிட்டு அவைகளுக்குப் பதிலாக ஒரு ஸெர்டிபிகேட் பெற்றுக் கொள்ளலாம்.

7. இந்த ஸெர்டிபிகேட்டுகள், ஸ்டாம்புகள் ஆகிய இரண்டையும் தபாலாபீஸுகளிலாவது கவர்ன்மெண்டாரால் நியமிக்கப்பட்ட அதிகாரம்பெற்ற ஏஜெண்டுகளிடமாவது ஸேவிங்ஸ் பீரோக்களிலாவது பெற்றுக் கொள்ளலாம்.

உம்முடைய ஸேவிங்ஸ் குரூப்பில் இப்போதே சேரவும்


சேதமின்றி சலவை
செய்யப்பட்டது
அதோடு ஸன்லைட்டால்
வெண்மையாக்கப்பட்டது
— ஜாஸ்தி அழுக்குப்
படிந்த இடங்கள் உள்பட
உங்கள் ஆடைகளில் பழக்கத்தால் சேதமடையுமிடங்களை கவனியுங்கள்! இவைதான் ஜாஸ்தி அழுக்குப்படியும் பாகங்கள். ஆடைகளை, சிறிது சோப்பைத்தேய்த்து தண்ணீரில் நனைத்து, அடித்துத் துவைப்பதால் அதிகமாக கெட்டுப்போகக் கூடிய இடங்களும் இவையே. உங்கள் துணிகளை ஸன்லைட் முறைப்படி சுத்தம் செய்து அடித்துத் துவைப்பதனுலேற்படும் நாசத்தை விலக்குங்கள்.
ஸன்லைட்டின் ஏராளமான சுயமாக இயல்கிற நுரையை, நனைந்த துணியில் புகுத்திக் கசக்கினுல் அதிகமாக அழுக்குப்படிந்துள்ள இடங்கள்கூட தூய வெண்மையாகிறது. இச்சுத்தமான சோப் உங்கள் துணிகளுக்கு நன்மையளிக்கிறது—அவைகளுக்கு இறுகையோத்த அழகைக் கொடுக்கிறது. அன்றியும் உங்கள் கைகளை மிருதுவாகவும், மழமழப்பாகவும் வைத்துக்கொள்ளுகிறது.
இது ஸன்லைட் முறைப்படி சுத்தம் செய்தது!
SUNLIGHT SOAP
ஸன்லைட் சோப்
S. 80-23 TM
LEVER BROTHERS (INDIA) LIMITED

கல்கி

பொருளடக்கம்

மலர் 6 | இதழ் 13

1946 அக்டோபர் 27

வியய | ஐப்பசி 11

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்களும், சம்பவங்களும் கற்பனையே.

கல்கி

மலர் 6 | தமிழ்த் திருநாடு தன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார் | இதழ் 13

என்ன சேதி?

வரவேற்பு விசித்திரம்

பாரதத் தாயின் தவப் புதல்வரான பண்டித நேரு தமது எல்லைப்புறச் சுற்றுப் பிரயாணத்தை முடித்துக் கொண்டு பத்திரமாகப் புதுடில்லிக்குத் திரும்பி வந்து சேர்ந்தது பற்றி எல்லையற்ற மகிழ்ச்சி அடைகிறோம்.

மேற்படி சுற்றுப் பிரயாணம் தொடங்கிய இடத்தில் நமது தலைவரை ஐயாயிரம் நீட்டிய சட்டிகள் வரவேற்றன! பிறகு ஆங்காங்கு மலைப் பிஞ்சுகளின் வீச்சும் துப்பாக்கிக் குண்டுகளின் 'விர்ச்'சும் மகத்தான வரவேற்பு அளித்தன.

இத்தகைய விசித்திர வரவேற்புகளுக்கிடையே ஜவாஹர்லால்ஜி தமக்கு இயல்பான இணையற்ற துணிச்சலுடன் சுற்றுப் பிரயாணத்தைச் சாங்கோபாங்கமாகச் செய்து முடித்து விட்டுத் திரும்பி யிருக்கிறார்.

மேற்படி சுற்றுப் பிரயாணத்தின் போது அவருக்கு முன்னாலும் பின்னாலும் சென்று கண்ணினைக் காக்கின்ற இமையைப் போல அவரைக் காப்பாற்றிக் கொண்டு வந்து சேர்த்த கான் அப்துல் கபார்கானுக்கும் அவருடைய சகோதரர் டாக்டர் கான்சாகிபுக்கும் நமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

சுற்றுப் பிரயாணம் ஏறக் குறைய முடிந்து கடைசியாகப் பிஷாவருக்குத் திரும்பி வரும் மார்க்கத்தில் மாலகந்த் பிரதேசத்தில் கான் சகோதரர்கள் காட்டிய அபார தீரத்துக்கு ஈடு இணையே கிடையாது.

மேற்படி பிரதேசத்தில் துஷ்பிரசாரத்தினால் மனம் பேதலித்த மலை வாசிகளின் பெருங் கூட்டம் நேருஜியின் காரை வழி மறித்துக் கல்மாரி பொழியத் தொடங்கியது. நேருஜியைக் காப்பாற்றும் பொருட்டுச் சர்க்கார் ஏற்பாடு செய்திருந்த இராணுவ பந்தோபஸ்துக்கள் எல்லாம் சிதறுண்டு ஓடிவிட்டன. அத்தகைய ஆபத்தான நிலைமையில் கான் சகோதரர்கள் தைரியமாக முன் வந்து நின்று நேருஜியைத் தேசத்துக்குக் காப்பாற்றிக் கொடுத்தார்கள்.

எல்லைப்புற காந்தி கபார் கான் மலை வாசிகளின் கல் வீச்சினால் பண்டிதரின் உயிருக்கு ஆபத்து ஏற்படாவண்ணம் தாமே அவற்றை ஏற்றுக்கொண்டு நேருவை மறைத்துக் கொண்டார். இந்த அன்புப் பணியின் காரணமாக அவருக்கு மண்டையிலும், மூக்கிலும் கையிலும் சிறிது காயம் ஏற்பட்டு ஆஸ்பத்திரிக்குச் செல்ல நேர்ந்ததென்று அறிகிறோம். இதுவல்லவா சிநேக தர்மம்? இதுவல்லவா சகோதர விசுவாசம்?

எல்லைப்புறத் தொல்லை

இந்தியாவின் வடமேற்கு எல்லைப் புறம் சரித்திரப் பிரசித்தி பெற்றது. இங்கேதான் கீர்த்தி வாய்ந்த (அபகீர்த்தியும் அதிகம் வாய்ந்த) கைபர்க் கணவாய் இருக்கிறது. இந்தக் கணவாயின் வழியாகத்தான் இந்தியாவிற்குள்ளே இரண்டாயிரம் வருஷத்துக்கு முன்னாலிருந்து அன்னியர்கள் அடிக்கடி படையெடுத்து வந்தார்கள். இந்தியாவின் அங்க வங்க கலிங்க காஷ்மீர காம்போஜம் முதலான 64 தேசத்து அரசர்களும் தங்களுக்குள் ஒற்றுமைப்பட்டு அந்த ஒரு வடமேற்கு எல்லைக் கணவாயைப் பாதுகாக்க வகை செய்யாத காரணத்தினாலே பாரத மக்கள் ஆதி காலத்திலிருந்து எத்தனையோ படையெடுப்புக்களுக்கும் அவை காரணமான துன்பங்களுக்கும் ஆளாகி யிருக்கின்றனர். தற்சமயம் மேற்படி எல்லைப்புறத்தில் சுமார் ஐந்தரை லட்சம் பட்டாணியர் வசித்து வருகின்றனர். அவர்களில் பெரும்பாலோர் மலைப்பாறைகளிலேயும் குகைகளிலேயும் மறைந்து ஒளிந்து வாழுகிறவர்கள். கல்வியும் நாகரிகமும் அறியாதவர்கள். கொள்ளை, கொலை, சுரசோரம் முதலிய கொடுமைச் செயல்களில் ஈடுபட்டு வாழ்க்கையைக் கழிப்பவர்கள். எவ்விதக் கட்டுப்பாட்டுக்கும் அடங்காமல் சுயேச்சையாக வாழும் மேற்படி எல்லைப்புற மக்களை பிரிட்டிஷார் நாளது வரையில் ஒரு கையினால் துப்பாக்கி வேட்டு தீர்த்தும் வெடிகுண்டு போட்டும் இன்னொரு கையினால் லஞ்சப் பணம் கொடுத்

தும். ஓரளவு கட்டுப்படுத்தி வைத்து வருகிறார்கள். இரண்டாவது வகைக் காரியத்துக்காக அவர்களிடையே சில தலைவர்களையும் ஏற்படுத்தி யிருக்கிறார்கள். லஞ்சத்துக்கு ஆசைப்பட்ட மேற்படி தலைவர்கள் பிரிட்டிஷ் ஆட்சியின் கைப்பொம்மைகளாக இருந்து வருகிறார்கள். அவர்களே சில சமயம் கட்டிலிருந்து பிய்த்துக்கொண்டு கொலை கொள்ளை நரசோரம் முதலியவற்றில் ஈடுபடுவதும் உண்டு.

இத்தகைய எல்லைப்புற மலைவாசிகளை நேரில் பார்த்து அவர்களுடைய குறைகளைப் போக்கும் பொருட்டும், அவர்களுக்கும் மற்ற இந்திய மக்களுக்கும் சிநேகத்தை வளர்க்கும் பொருட்டும் நமது ஒப்பற்ற தலைவர் அங்கே விஜயம் செய்தார். ஆனால் இது சிலருக்குப் பிடிக்கவில்லை.

வீண் போகாது!

அப்படிப் பண்டித நேரு எல்லைப்புறம் செல்வதும் எல்லைப்புற ஜாதியாரோடு சிநேகம் பூணுவதும் பிடிக்காதவர்கள் யார் என்று கேட்டால் இந்திய சர்க்காரின் 'பொலிடிகல் டிபார்ட்மெண்டா'ரும், சில குறுகிய நோக்கங்கொண்ட முஸ்லிம் லீக் பிரமுகர்களுந்தான்.

புதுடில்லியில் நமது மாபெருந் தலைவர்கள் வீற்றிருந்து ஆட்சி புரிவது நெடுங்காலமாக இந்த நாட்டை ஏகபோகமாக ஆண்ட அதிகார வர்க்கத்துக்குப் பிடித்திருக்கும் என்று எதிர்பார்க்க முடியாது. அதிகார வர்க்கத்தின் குருபீடமும் உயிர் நிலையுமாக விளங்குவது 'பொலிடிகல் டிபார்ட்மெண்டு' என்று சொல்லலாம். இங்கிலீஷ்காரர்களுக்கு இந்தியாவை விட்டு வெளியேறுவதைத் தவிர வேறு வழி இல்லை என்று ஏற்பட்டிருக்கும் போது, அப்படிப் போக விரும்பாதவர்கள் எல்லைப்புற நிலைமையைத்தான் நம்பிக் கொண்டிருக்கிறார்கள்.

எனவே, தேசிய சர்க்காரின் பிரதமரான பண்டித ஜவாஹர்லால் நேருவும், எல்லைப்புறப் பிரதமரான டாக்டர் கான்சாஹிப் அவர்களும் மேற்படி மலை ஜாதிப் பட்டாணியர்களுடன் சிநேக உறவு பூணுவதை அவர்கள் விரும்பவில்லை. தங்களுக்கு அனுகூலமாக முஸ்லிம் லீக் கட்சியையும் உபயோகப் படுத்திக் கொண்டு மலை ஜாதியினரிடையே துஷ் பிரசாரம் செய்தார்கள். அவர்களில் ஒரு சாராரை ஏவிவிட்டு ஜவாஹரின் சுற்றுப் பிரயாணத்துக்கு முட்டுக் கட்டை போடப் பார்த்தார்கள்.

ஆனால் நேருஜியும் கான் சகோதரர்களும் அந்தச் சூழ்ச்சிகளையெல்லாம் சிறிதும் பொருட்படுத்தாமல் சுற்றுப் பிரயாணத்தை வெற்றிகரமாக முடித்துக்கொண்டு வந்து சேர்ந்திருக்கிறார்கள்.

பண்டித ஜவாஹரும் கான் சகோதரர்களும் எல்லைப்புறத்தில் சிந்திவிட்டு வந்திருக்கும் இரத்தத் துளிகள் ஒரு நாளும் வீண் போகாது என்று நம்புகிறோம்.

அந்தத் துளிகளிலிருந்து முளைக்கும் சிநேக விருக்ஷமானது எல்லைப்புற ஜாதியினரை நாளடைவில் இந்தியப் பொது மக்களோடு ஒன்று பிணைக்கும் சாதனமாகும் என்றும் நம்புகிறோம்.

புதுடில்லிச் செய்தி

“இல்லை; நான் இல்லை! என் வேலையும் இல்லை!” என்று புதுடில்லி கப்புடு அவசரத் தந்தி அனுப்பி யிருக்கிறார். “உதவி நாடகம் நடத்தித் திருச்சி நேஷனல் காலேஜுக்கு நிதி சேர்த்து அனுப்பப் போகிறவர் ஸ்ரீ ராமய்யா அவர்கள்தான்!” என்று சொல்கிறார். அதோடு, “என் கடிதத்தை நன்றாகப் படித்துப் பாருங்கள்!” என்றும் கேட்டுக் கொள்கிறார். ரொம்ப சரி! நேஷனல் காலேஜுக்கு நிதி வரப் போகிறது என்ற சந்தோஷத்தில் கடிதத்தை நன்றாய்ப் படிக்கக்கூட முடியவில்லைதான். ஸ்ரீ ராமய்யா அவர்கள் மேற்படி கைங்கரிய நாடகத்துக்குப் பொறுப்பு வகித்து நடத்தப் போகிறார் என்பதை ஒப்புக்கொள்கிறேன். அதற்காக எல்லா பாரத்தையும் அன்பர் ராமய்யா அவர்களின் பேரிலேயே போட்டு விடாமல் ஸ்ரீ கப்புடு அவர்களும் மற்றும் புதுடில்லியிலுள்ள தமிழர்களும் பூரண ஒத்துழைப்பை அளிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொரு மகத்தான செய்தியையும் ஸ்ரீ கப்புடு அறிவித்திருக்கிறார். மேற்படி உதவி நாடகம் ராஜாஜியின் அக்கிராசனத்தின் கீழ், அவருடைய முன்னிலையில், நவம்பர் 9உ 10உ களில் நடைபெறப் போகிறதாம்! இதைக் கேட்டதும் தமிழ்நாட்டிலே நமக்கெல்லாம் கூட அங்கே பறந்து போய்விடலாம் என்று தோன்றுகிறதல்லவா? ஆனால் அப்படிச் செய்து புதுடில்லித் தமிழர்களுக்கு ஹாலில் இடமில்லாமல் செய்துவிட வேண்டாம்! இந்தத் தடவை அவர்களே நாடகத்தைப் பார்த்து மகிழ்ந்து நேஷனல் காலேஜுக்கு உதவி செய்த பெருமையையும் அடையட்டும். இன்னொரு சமயம் நாம் பார்த்துக் கொள்ளலாம்.

தடுக்க முடியுமா?



தலைவர் ஜவாஹரும் கான் அப்துல் கபார் கானும் இந்தியாவின் எல்லைப்புறத்து மலை ஜாதியாரைச் சந்திக்கச் சென்றபோது பல இடையூறுகள் ஏற்பட்டன. அவற்றுக்குக் காரணம் 'பொலிடிகல் டிபார்ட்மெண்ட்' அதிகாரிகளின் சூழ்ச்சிதான் என்று கபார்கான் சொல்கிறார். ''பிரிட்டிஷ் சிங்கத்தை எதிர்த்துத் தோற்கடித்த எங்களுக்கு இந்தப் பொலிடிகல் இலாகாவின் நரிச் சூழ்ச்சி எல்லாம் எம்மாத்திரம்!'' என்று ஜவாஹர் கேட்கிறார்.

வங்கம் அடைந்த பங்கம்

அருமை வங்க நாட்டின் நிலையை நினைக்கும்போது நமது இதயம் துடிக்கிறது; உள்ளம் உருகுகிறது; கண்ணீர் பெருகுகிறது.

பாரதத்தாயின் அருமந்தப் புதல்வி வங்கம் என்னும் நங்கை. இந்திய தேசிய இயக்கத்தின் தாயகம் கங்கை நதி பாயும் வங்க தேசம். தற்கால இந்திய சமுதாயத்தின் சகலவிதமான முன்னேற்ற இயக்கங்களும் அந்தப் புண்ணிய பூமியிலே முளைத்தெழுந்து உருப் பெற்றவைதான்.

ஸ்ரீ ராஜாராம் மோகன்ராய், ஸ்ரீ கேசவசந்திரசேனர் ஆகிய மாபெரும் சமூக சீர்திருத்தத் தலைவர்கள் வங்க நாட்டிலே தோன்றினார்கள்.

ஹிந்து சமயத்துக்குப் புத்துயிரும் புது வாழ்வும் தந்த ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸரும் ஸ்ரீ விவேகானந்தரும் அந்தப் புனித நாட்டிலேதான் அவதரித்தார்கள்.

உலகத்துக்கெல்லாம் உரிய மகா கவியான ரவீந்திரர் வங்க தேசத்தையே ஜன்ம பூமியாகக் கொண்டார்.

தற்கால இலக்கிய முன்னேற்றத்துக்கு வழி காட்டிய ஸ்ரீ பங்கிம் சந்திர சட்டர்ஜியும், ஸ்ரீ சரத்சந்திர சட்டர்ஜியும் அந்த நாட்டில் தோன்றியவர்களே.

ஸர் ஜகதீச சந்திரபோஸ், ஸர். பி. ஸி. ராய் முதலிய விஞ்ஞானிகளுக்கும் வங்கத் தாய் பிறப்பளித்தாள்.

எல்லாவற்றுக்கும் மேலாக, இந்திய சுதந்திர இயக்கம் இந்த நாளில் தோன்றி உருவடைந்து வளர்ந்து செழித்தது அந்தத் தியாக பூமியிலே தான். வைஸராய் கர்ஸான் வங்காளிகளின் மிதமிஞ்சிய செல்வாக்கைக் குலைக்கும் நோக்கத்துடன் அந்த மாகாணத்தை இரண்டாகப் பிரித்த காரியம், சுதந்திர இயக்கமாகிய பெரு நெருப்பைக் கொழுந்துவிட்டு எரியச் செய்த பெருங் காற்றாக உதவிற்று!

ஸ்ரீ ஆனந்த மோகன் போஸ், ஸ்ரீ சுரேந்திரநாத பானர்ஜி, ஸ்ரீ விபின சந்திர பாலர் முதலியோர் 'சுதேசி' இயக்கத்தின் நாட்களிலும், தியாக மன்னராகிய தேசபந்துதாஸ் ஒத்துழையாமை இயக்கத்தின் காலத்திலும் பாரதத்தாயின் விடுதலைக்கு மகத்தான தொண்டு புரிந்தார்கள்.

கடைசி கடைசியாக, நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் தமது அதிசயமான வீர வாழ்க்கையின் மூலம் இந்திய மக்களின் இதய சிம்மாசனத்தில் என்றும் அழியாத இடம் பெற்று விட்டார்.

இஸ்லாமியப் பண்பாடு, முஸ்லிம் நாகரிகம் ஆகியவற்றுக்கெல்லாம் சிகரமாக விளங்கும் மௌலானா ஆஸாத் சென்ற ஆறு வருஷ காலத்தில் இந்திய சுதந்திரத்துக்குச் செய்திருக்கும் தொண்டு ஒப்புவமையற்றதாகும்.

இப்படியெல்லாம் சென்ற அறுபது வருஷகாலமாக எல்லா வகையிலும் முன்னணியில் நின்று பெயரும் புகழும் பெற்றுவந்த வங்க நாட்டுக்குச் சமீப காலத்தில் ஏன் இத்தகைய துரதிர்ஷ்டங்கள் தொடர்ந்து வந்து கொண்டிருக்கின்றன? கடவுள் ஏன் இப்படி அந்த நாட்டைச் சோதனை செய்கிறார்? உயர்ந்தவர்களும் உத்தமர்களுமே இந்த உலகில் மிகக் கடுமையான சோதனைகளுக்கு உள்ளாகிறார்கள் என்னும் நியதி அந்த தேசத்தை இப்படியா மேலும் மேலும் பாதிக்க வேண்டும்?

* * *

சில வருஷத்துக்கு முன்னால் வங்க நாட்டில் கலப்பற்ற முஸ்லிம் லீக் ஆட்சி ஏற்பட்டது. (அந்த ஆட்சிக்கு கல்கத்தா ஐரோப்பியர்களும் அதிகார வர்க்கத்தாரும் பக்க பலமாக நின்று தோள் கொடுத்தனர்.) அன்று முதல் வங்க தேசத்துக்குத் துர்க்கதிக்குமேல் துர்க்கதியாக நேரிட்டுக் கொண்டிருக்கிறது.

முதலில் அந்தப் பயங்கரமான வங்காளப் பஞ்சம் நேர்ந்தது. ஸர் நாஸிமுடீன் முதன் மந்திரியாயிருந்த காலத்தில் அவருக்குத் துணை மந்திரியாகப் பஞ்சமும் ஆட்சி செலுத்திற்று. லட்சக்கணக்கான ஜனங்கள் செத்து மடிந்தார்கள். சாலைகளிலும் வீதிகளிலும் பஞ்சத்தால் மடிந்தவர்களின்

உடலங்கள் கிடந்து கழுகுகளுக்கும் நரிகளுக்கும் இரையாயின.

ஸர் நாஸிமுடீன் அரசாங்கம் மாறி சுஹ்ரவர்த்தி ஆட்சி ஏற்பட்டது. நாஸிமுடீன் ஆட்சியே பரவாயில்லை என்று சொல்லும்படி ஆயிற்று.

'கல்கத்தா இருட்டறை' முதலிய சரித்திரக் கற்பனைச் சம்பவங்களையெல்லாம் தோற்க அடிக்கும்படியான 'கல்கத்தா பயங்கரப் படுகொலை' நடந்தது. சுஹ்ரவர்த்தியின் ஆட்சியிலேதான் நடந்தது. ஆப்பிரிக்காவின் அநாகரிக மக்கள்,—மனிதரை மனிதர் கொன்று தின்னும் மக்கள்,—செய்யக்கூடியதாக நாம் கதைகளிலே கேட்டும் ஸினிமாக்களிலே பார்த்தும் அறிந்திருக்கும் கோரமான செயல்களை விடப் பன்மடங்கு கோரமான செயல்கள் நடந்தன. அவற்றையெல்லாம் சுஹ்ரவர்த்தியின் போலீஸ் இலாகாவைச் சேர்ந்தவர்கள் வெறுமனே பார்த்துக் கொண்டிருந்தார்கள் என்று புகார்கள் எழுந்தன. இந்தப் புகார்களைக் குறித்து விசாரித்து உண்மையைக் கண்டுபிடித்து உலகத்துக்கு அறிவிப்பதற்கு இப்போது விசாரணை நடந்து வருகிறது.

மேற்படி விசாரணை ஆரம்பமான அதே சமயத்தில்,—இந்திய இடைக்கால சர்க்காரில் முஸ்லீம் லீக்கினர் பிரவேசிக்கத் தீர்மானித்த அதே சமயத்தில்,—கல்கத்தாப் படுகொலையையும் பன்மடங்கு மிஞ்சிவிட்ட கோர பயங்கர அட்டூழியங்கள் கிழக்கு வங்காளத்தில்,— நவகாளி, திப்பெரா என்னும் ஜில்லாக்களில்,—நடந்ததாகச் செய்திகள் வந்தன. இன்னும் வந்து கொண்டிருக்கின்றன. அந்தச் செய்திகளைப் படிப்பதே கஷ்டமாயிருக்கிறது; நம்புவது அதைவிடக் கடினமாயிருக்கிறது. ஆறறிவு படைத்த மனிதர்கள் இம்மாதிரியான காரியங்களையும் செய்ய முடியுமா என்று பிரமிப்பாயிருக்கிறது.

புராண இதிகாசங்களில் இரணியாட்சன், இரணியகசிபு, இராவணன், கும்பகர்ணன், சூரபதுமன், விருத்திராசுரன், கம்ஸன், சிசுபாலன், நரகாசுரன் முதலியவர்களுடைய கோர கிருத்தியங்களைப் பற்றிப் படிக்கும்போது இடையிடையே, "நல்லவேளை! இதெல்லாம் கதைதானே?" என்று எண்ணி நம்மில் சிலர் ஆறுதல் செய்து கொள்வதுண்டு. அது மட்டுமல்ல; ஜெர்மனியில் அடால்ப் ஹிட்லர் கையாண்டதாகச் சொல்லப்பட்ட ராட்சதக் கொடுமை முறைகளைப் பற்றிப் பத்திரிகைகளில் படித்தபோதும் சரி, ஸினிமாத் திரையில் பார்த்தபோதும் சரி, "இதெல்லாம் பொய்யும் கற்பனையுமாகத்தான் இருக்க வேண்டும்! ஆஹா! இந்த இங்கிலீஷ்காரர்கள் வெகு பொல்லாதவர்களாயிற்றே? எந்தப் பொய்யை வேணுமானாலும் இவர்கள் சிருஷ்டித்து விடுவார்கள்! ஸினிமாப் படம் கூட எடுத்து விடுவார்கள்!" என்று நம்மில் பலர் சொல்லிக் கொண்டிருந்தோம்.

ஆனால் இப்போது கீழ் வங்காளத்திலே நடப்பதாகச் சொல்லப்படும் கோர கிருத்தியங்களைப் பற்றிப் படிக்கும்போது, "இப்படியெல்லாம் இந்தப் புண்ணிய பூமியில்,—காந்தி மகான் வாழ்ந்திருக்கும் காலத்தில்,—நடக்கக் கூடுமானால், இரணிய கசிபு நரகாசுரன் முதலானவர்களும் ஏன் இருந்திருக்கக் கூடாது? அடால்ப் ஹிட்லரின் கையாட்கள் ஏன் ஜெர்மனியில் அத்தகைய அட்டூழியங்களைச் செய்திருக்கக் கூடாது? எல்லாம் உண்மையாகவே இருக்கலாம்!" என்று நினைக்கத் தோன்றுகிறது.

கோயரிங், கேடெல், ஹெஸ், ரிப்பன்டிராப் முதலியவர்களைத் தூக்கிலே போடும்படி தீர்ப்பு வெளியான போது, நம்மில் பலருக்குக் கொஞ்சம் அநுதாபமாயிருந்தது. "ஐயோ! பாவம்! என்ன இருந்தாலும் சுத்த வீரர்கள்; மகத்தான வீரச் செயல்கள் புரிந்தவர்கள். யுத்தத்தில் தோற்றவர்களை இம்மாதிரியா நடத்துவது? இது என்ன நாகரிகம்?" என்று எண்ணினோம். இப்போது அந்த எண்ணம் மாறி, "வேண்டியதுதான்! யூதர்களை அப்படியெல்லாம் சித்திரவதை செய்த பாதகர்களைத் தூக்கிலே போட வேண்டியதுதான்!" என்று கருதத் தொடங்குகிறோம்.

வங்காளத்தில் நடந்த கோரச் செயல்கள்,—பச்சைக் குழந்தைகளை எரிகிற நெருப்பில் தூக்கிப் போட்டது போன்ற காரியங்கள்,—மேற் கண்டவாறு நமது மனோபாவத்தையே மாற்றக் கூடியவையாயிருக்கின்றன.

இத்தகைய துர்க்கதிக்கு ஆளான வங்க நாட்டுக்கு நமது இருதய பூர்வமான அநுதாபத்தைச் செலுத்துகின்றோம். அதைக் காட்டிலும் அதிக

மாகவே முஸ்லிம் சமூகத்துக்கு நமது அநுதாபம் உரியதாகிறது.

ஆஹா! ஹக்கீம் அஜ்மல்கானும் டாக்டர் அன்ஸாரியும் மௌலானா ஆஸாதும் கான் அப்துல் கபார் கானும் பிறந்து பெருமை தந்த இந்திய முஸ்லிம் சமூகத்துக்கு இது என்ன அவப் பெயர்? இது என்ன அபகீர்த்தி?

இம்மாதிரி காரியங்களினால் முஸ்லிம் சமூகத்துக்கு எந்தவித நன்மையாவது உண்டாகப் போகிறது என்றோ, இதனால் பாகிஸ்தான் கிடைத்துவிடப் போகிறது என்றோ முஸ்லிம் சமூகத்தில் யாராவது எண்ணினால், அதைக் காட்டிலும் பெருந் தவறு யாதொன்றும் இல்லை.

பாபர், ஹுமாயூன், அக்பர் முதலியவர்கள் போர்க்களத்தில் சண்டையிட்டார்கள்; பொது மக்களிடம் அன்புடன் நடந்து கொண்டார்கள். அவர்களுடைய காலத்தில் முஸ்லிம் சமூகமும் மொகலாய சாம்ராஜ்யமும் மகோந்நதத்தை அடைந்தன. அதற்கு மாறாக அவுரங்கஜீப் பொது மக்களைத் துன்புறுத்தி, மத மாற்றுதல் முதலிய காரியங்களுக்கு இடங்கொடுத்தார். அவருடைய அந்திய காலத்திற்குள்ளே மொகலாய சாம்ராஜ்யம் சிதைந்து சின்ன பின்னம் அடையத் தொடங்கி விட்டது.

அன்பினாலும் சிநேகத்தினாலுந்தான் எந்தத் தனி மனிதனும் சரி, எந்தச் சமூகமும் சரி, சிறப்பும் மேன்மையும் அடைய முடியும்.

இப்போது கீழ் வங்காளத்தில் நடப்பது போன்ற காரியங்களினால் முஸ்லிம் சமூகத்துக்குப் பெரும் அபகீர்த்தியும் நஷ்டமுந்தான் ஏற்படும் என்பதில் ஐயமில்லை.

ஹிந்துமகா சபைக்காரர்களும் ஆரிய சமாஜிகளும் நாட்டில் அதிக செல்வாக்கை அடைவார்கள். ஹிந்து-முஸ்லிம் சமரசத்தை விரும்பும் காங்கிரஸ் தலைவர்களும், சிறுபான்மை முஸ்லிம்களுக்குச் சலுகை காட்ட வேண்டுமென்று சொல்லும் தாராள நோக்கம் உடையவர்களும் பின்னுக்குப் போகவேண்டியதாகும்.

இந்தியாவில் ஹிந்துக்கள் முப்பது கோடிப் பேர்; மற்றவர்கள் எல்லாரும் பத்து கோடிப் பேர்தான். என்னதான் பஞ்சம், படுகொலை, பலாத்கார மத மாற்றம் முதலிய முறைகளைக் கையாண்டாலும் முப்பது கோடியில் ஒரு கோடியாவது குறைந்துவிடப் போகிறதா? ஒருநாளும் இல்லை!

ஆகவே, ஹிந்து சமூகத்தைக் காட்டிலும் இந்தமாதிரி பயங்கர நிர்மூடச் செயல்களைத் தடுப்பதிலே முஸ்லிம் சமூகத்துக்குத்தான் பதின்மடங்கு அக்கறை இருக்கவேண்டும். அம்மாதிரி செயல்களுக்காக அவர்கள்தான் அதிகமாக வருந்தப்பட வேண்டும். சுஹார்வர்த்தியின் ஆட்சி முறையை நினைந்து அவர்கள்தான் அதிகமாகக் கண்ணீர் வடிக்க வேண்டும்.

* * *

சகிக்க முடியாத, நினைக்க முடியாத துர்க்கதிக்கு ஆளாகி யிருக்கும் கீழ்வங்க நாட்டினிடம் நாம் அநுதாபம் கொண்டிருக்கிறோம். அந்த நாட்டு ஜனங்களுக்கு நேர்ந்த கதியை நினைந்து வேதனை அடைந்திருக்கிறோம். சுஹார்வர்த்தியின் ஆட்சிப் போக்கையும், ''வங்காள கவர்னர்'' என்னும் பட்டத்தை வெட்கமின்றிச் சுமந்து கொண்டிருக்கும் கனவான் சொல்லும் சால்ஜாப்பையும் எண்ணி ஆத்திரம் அடைகிறோம்.

ஆனால் மேற்கூறிய வருத்தம், வேதனை, ஆத்திரம் எல்லாம் பிறமாகாணங்களின் ஜனங்களை அர்த்தமற்ற காரியங்களில் இறங்கும்படி தூண்ட இடங்கொடுக்கக் கூடாது.

சமூகத் துவேஷம் என்பது பிளேக் முதலிய கொள்ளை நோய்களைப் போன்றது. அந்த நோய் தோன்றிய இடத்திலேயே அதற்கு அணை போட்டுத் தடுக்க வேண்டும். நோய்க்கு ஆளானவர்களிடம் கொண்ட அநுதாபத்தினால் அதை மேலும் பரவச் செய்யக் கூடாது.

நமது அநுதாபமும் அன்பும் நம்மாலியன்ற உதவியும் கீழ் வங்காளம் வரையில் செல்லட்டும்; அதற்கப்பாலும் போகட்டும். ஆனால் அங்கே பரவியுள்ள துவேஷமென்னும் கொள்ளை நோயைப் பொறுத்த வரையில், சென்னைக்கும் கீழ் வங்காளத்துக்கும் உள்ள ஆயிரத்தைந்நூறு மைல் தூரம் அப்படியே இருக்கட்டும்! கொஞ்சங்கூட அந்தக் கொள்ளை நோய் நம்மைக் கிட்டி வரவேண்டாம்.

காலக்ஷேபப் பரிசு: சென்ற இதழில் வெளியான காலக்ஷேபத் துணுக்குக்குப் பரிசு பெற்றவர்: எம். எஸ். துரைசாமி, மாணவன், நேஷனல் கலாசாலை, திருச்சி.

சூலமங்கலம் வைத்யநாத பாகவதர்

ஞாபகார்த்த விழா

[ஈ. கிருஷ்ணய்யர் பி. ஏ., பி. எல்.,]

நமது கலையுலகத்தில், சங்கீதத்திலும் நாட்டியத்திலும் அபார ஞானம் படைத்து, தமது ஆயுள் முழுதும் கலைக்கே தொண்டு செய்து, புனித வாழ்வு நடத்தி வந்து சித்தியடைந்த பெரியார்களில், சூலமங்கலம் ஸ்ரீ வைத்தியநாத பாகவதர் தலைசிறந்தவர். ஹரிகதா காலக்ஷேபத்தை அவர் முக்கிய தொழிலாகக் கொண்டிருந்தார். சங்கீதத்தில் ஞானக் களஞ்சியமாய் விளங்கி வந்ததோடு அவர் காலத்துக் கலை உலகத்தை நன்கு அறிந்தவர். முன் தலைமுறையைச் சேர்ந்த பெரிய வித்வான்களிடம் நெருங்கிப் பழகி அவர்களுடைய நன்மதிப்பைப் பெற்றவர். அவர்களில் பலரைப் பற்றிப் பாகவதர் எழுதி வெளியிட்ட கட்டுரைகளை நேயர்கள் கல்கியில் படித்திருப்பார்கள். (இப்போது அந்தக் கட்டுரைகள் "ஹிந்து" பத்திரிகையில் ஆங்கிலத்தில் வெளியாகி வருவதையேனும் பார்த்திருப்பார்கள்.)

நாட்டிய சாஸ்திரத்தில் பாகவதருக்கிருந்த அறிவும் ஆற்றலும் அனுபவமும், அவை மூலம் பாகவத நாடக மேளம் என்ற தனிச் சிறப்புக் கொண்ட தமிழ் நாட்டு நாட்டிய நாடகத்திற்கு அவர் செய்து வந்த சேவையும் மிக அரியவை. இக் காலத்தில், நாட்டிய நாடகமென்றால், கேரளநாட்டுக் கதகளிதான் எனப் பொதுவாகக் கருதப்படுகிறது. தஞ்சை ஜில்லாவில் சூலமங்கலம், மெலட்டூர், ஊத்துக்காடு முதலிய கிராமங்களில் பரம்பரை பரம்பரையாக அப்யசிக்கப்பட்டு வந்திருக்கும் இந்த நாட்டிய நாடகம் முற்றிலும் பரத சாஸ்திரத்தைத் தழுவியதும், கதகளியை விடச் சௌஷ்டவம் கொண்டதுமான சிறந்த கலையாகும். அந்தக் கலை மேற்படி கிராமங்களின் கோவில்களை விட்டு வெளியில் வாராததால் அதன் முக்கியத்வமும் அழகும் போதியவாறு பிராபல்யமடையவில்லை. இந்த பாகவத நாடக மேளக் காட்சிகளுக்கு ஸ்ரீ வைத்யநாத பாகவதர் நிகரற்ற தலைவராயும் சூத்திர தாரராயிருந்து சுமார் 50 வருஷ காலம் சூலமங்கலத்தில் ஆண்டுதோறும் நடத்தி வந்தவர். இப்படி 76 வயதுவரை தொண்டு செய்த பிறகு தம் முடிவு காலத்தை முன்னதாக அறிந்து கொண்டு, துறவறம் பூண்டு, 1943-ம் வருஷம், அக்டோபர் 27-ந் தேதி சமாதியடைந்தார்.

இந்தப் பெரியாரிடத்தில், சாதாரணமாய் வெளியில் வழங்காத சங்கீத உருப்படிகளும் நாட்டியத்துக்குப் பிரத்யேகமான அபூர்வ அழகு படைத்த தரு முதலிய பாட்டுக்களும் குவிந்திருந்தன.

அத்தகைய பெரியாரின் ஞாபகம் என்றும் மறக்கப் படாதிருக்கும் பொருட்டுத் தகுந்ததோர் ஞாபகச் சின்னம் அமைக்க வேண்டியது தமிழ்நாட்டின் கடமையாகும். அதற்காக ஒரு குருகுலம் ஸ்தாபிக்க முயற்சி நடப்பதும், அதற்கான நிதி சேர்ப்பதற்காக இண்டியன் பைன் ஆர்ட்ஸ் சங்கத்தின் ஆதரவில் சங்கீத விழா நடப்பதும் போற்றத்தக்கது. பல பிரபல வித்வான்கள், இலவசமாய்க் கைங்கரியம் செய்து உதவ முன் வந்திருப்பதும் மிகவும் பாராட்டத்தக்கது.

★

சென்ற புதன்கிழமை தீபாவளி தினத்தில் மேற்படி உத்ஸவத்தை கனம் ஹைகோர்ட்டு ஜட்ஜு கோவிந்தராஜாசாரியார் தலைமையில் தென்னாட்டுக் கொடை வள்ளல் டாக்டர் அளகப்பச் செட்டியார் திறந்து வைக்கும் திருவிழா கோலாகலமாய் நடந்தேறியது.

மேற்படி உற்சவத்தின் முதற் கச்சேரியாகச் சித்தூர் சுப்பிரமணியப் பிள்ளையின் கானம் நன்றாய் அமைந்தது மற்றொரு நற்சகுனமாகும். அன்று அவரது சாரீரம் சௌகரியமாய் வாய்த்ததோடு வெகு உற்சாகமாயும் பாடினார். கரஹரப்ரியா, சங்கராபரணம், பைரவி ராகங்களைத் தாராளமாய் வழங்கினார். அவர் கையாண்ட கிருதிகளின் நயப்பைப் பற்றி அதிகம் சொல்ல வேண்டியதில்லை. கனம் ஜட்ஜு கோவிந்தராஜாசாரியார் கூறியபடி, பிள்ளையவர்களின் பாட்டில் பாவம் நிறைந்த சாஹித்யத் தெளிவு மிகச் சிறப்பான அம்சமாகும். ராகபாவத்திற்காகவோ, சங்கதி வேலைப்பாடுகளுக்

காகவோ பாட்டுகளின் வார்த்தைகளோ அவர் மழுப்புவதேயில்லை. 'புத்திராது' என்ற தியாகராஜ கிருதி, பிள்ளையவர்களின் வழியில் விசேஷ வனப்பும் பாவமுங் கொண்டு விளங்கியது. "எவ்வளவுதான் படித்தாலும் புத்தி மாத்திரம் வருவதில்லையே!" என்ற பாவம் கொண்ட அந்த உருப்படி, தமிழ் நாட்டில் அரிய தொண்டு செய்யும் பெரியார்களை ஜீவிய காலத்திலும், இறந்த பிறகும்கூட, தக்க முறையில் கொண்டாடும் புத்தியும் ஆர்வமும் நமக்கு வருவதில்லையே என்ற குறையைச் சுட்டிக் காட்டுவது போலிருந்தது.

பாடகருக்கு அமைந்த பக்கவாத்யங்கள் பாராட்டத் தக்கவை. பிடில் வாசித்த ஆர். என். கோபாலகிருஷ்ணன், அந்த வாத்யத்தில் கைதேர்ந்த இளைஞர். எதையும் நாஸூக்காய் வாசிப்பவர். அன்றும் பாடகரோடு ஒத்துழைத்து சுகமாக வாசித்தார். மதுரை விஜயரங்கத்தின் மிருதங்கமும், வில்வாத்ரி அய்யரின் கடமும் கச்சேரியைக் கலகலக்கச் செய்து போஷித்தன.

கலை உலக அதிசயம்

ஒரு சமயம் பிரம்மதேவரானவர் தமது தர்மபத்தினியாகிய கலைவாணியைக் காணாமல் வானுலகம் பூவுலகம் எல்லாம் தேடிக்கொண்டு வந்த போது, கடைசியாகச் சென்னை மா நகரில் பத்மநாபா கார்டன் தெருவில் உள்ள ஸ்ரீ வி. வி. சீனிவாசய்யங்கார் அவர்களின் கிரகத்தில் தேவி எழுந்தருளியிருப்பதைக் கண்டு பிடித்ததாகவும், கண்டு பிடித்த பிற்பாடு, "தேவி! தக்க இடத்துக்கே வந்து சேர்ந்தாய்! கலைத் துறையில் உனக்குத் தெரிந்த விஷயங்களிலும் தெரியாத விஷயங்களிலும் உள்ள சந்தேகங்களை யெல்லாம் வி. வி. எஸ். அவர்களிடம் கேட்டுத் தெரிந்து கொண்டு வந்து சேர்!" என்று சொல்லிவிட்டுப் போனதாகவும் பிரஹத் பிரம்ம வைவர்த்த புராணம் சொல்லுகிறதென்பது அனைவரும் அறிந்த விஷயம்.



அத்தகைய ஸ்ரீ வி. வி. எஸ். அவர்கள், பரம்பரையான பெரிய குடும்பத்தில் வந்தவர்; வடமொழி நாகரிகத்திலும் தமிழ் மொழிப் பண்பாட்டிலும் திளைத்து முழுகி எழுந்தவர்; வித்வான்கள் புலவர்களுக்கெல்லாம் புகலிடமானவர்; கலை வளர்க்கும் ஸ்தாபனங்களுக்கெல்லாம் தாயும் தந்தையுமானவர்; பல ஆங்கில நாடக நூல்களின் ஆசிரியர்; பழமையான வைதிக முறையிலிருந்து எள்ளளவும் பிறழாதவர்; ரசிக சிரோமணிகளுக்கெல்லாம் சிரோமணியானவர். அப்பேர்ப்பட்டவரின் திருவுருவத்தை நமது இந்த இதழின் அட்டை கம்பீரமாகத் தாங்கிக் கொண்டு வெளி வருகிறது.

எத்தனையோ சர்வ தேசிய அரசியல் பிரமுகர்கள் முதலியோர் நமது அட்டையில் இடம் பெறுவதற்குக் காத்திருக்க, இந்தச் சமயத்தில் ஸ்ரீ வி. வி. சீனிவாசய்யங்கார் அவர்களுக்கு அந்த இடத்தைச் சம்பாதித்துக் கொடுத்த பெருமை இதோ அவரை ஆதாரமாகக் கொண்டு அழகாக நிற்கும் சின்னஞ் சிறு ஸ்ரீ குமாரிக்கு உரியதாகிறது.

ஸ்ரீ வி. வி. எஸ். அவர்களின் அருமைப் புதல்வியின் அருமைப் பேத்தியான ஸ்ரீ குமாரி தனது அக்டோபர் மீ 6-யன்று திருமயிலையில் அரங்க மேடைமீது ஏறித் தன் பாத நாட்டியக் கலையை அரங்கேற்றிய வைபவம் நடைபெற்றது. அந்த அதிசயத்தைப் பார்க்க ஆயிரம் பேருக்கு அதிகமான கனதனவான்களும் சீமாட்டிகளும் சபையில் அமர்ந்திருந்தார்கள். ஆறு வயது கூடப் பூர்த்தியாகியிராது என்று தோன்றிய ஸ்ரீ குமாரி பரத நாட்டியக் கலையின் மிக மிக நுட்பமான ஜதி வேறுபாடுகளை யெல்லாம் நினைவு வைத்துக் கொண்டு எள்ளளவும் தவறாமல் அமோகமாக ஆடியதையும், "தாயே யசோதா" போன்ற பதங்களுக்கு அழகழகாக அபிநயம் பிடித்ததையும், பாடியவர்களுக்குப் பாட்டில் மறந்து போன சரணத்தை எடுத்துக் கொடுத்ததையும், முகமலர்ச்சியுடன் முன்னும் பின்னும் ஓடி ஆடியதையும் பார்த்து அத்தனை பேரும் அதிசயத்தில் மூழ்கினார்கள். எல்லாவற்றையும் விடச் சபையோருக்கு மிகவும் அதிசயமளித்த விஷயத்தை, மேற்படி அரங்கேற்று வைபவத்துக்கு அக்கிராசனம் வகித்த நீதிபதி இராஜமன்னார் நன்கு எடுத்துச் சொன்னார். "இந்த மாகாணத்திலேயே ஸ்ரீ வி. வி. சீனிவாசய்யங்கார் அவர்களின் குடும்பம் கலை உணர்ச்சிக்குப் பெயர் போன குடும்பம்; அது போலவே கடுமையான வைதிக அனுஷ்டானத்திலும் புகழ்பெற்ற குடும்பம்; அத்தகைய குடும்பத்திலே பிறந்த ஒரு குழந்தை இம்மாதிரி அரங்க மேடையின் ஏறிப் பரதநாட்டியம் ஆடுவது என்பது அதிசயமான காரியந்தான். பரதநாட்டியக் கலை எவ்வளவு தூரம் சமூகத்தின் கவனத்தைக் கவர்ந்துவிட்டது, எத்தனை மேன்மை அடைந்து விட்டது என்பதற்கு இதைவிட அத்தாட்சி வேறு வேண்டியதில்லை!" என்று நீதிபதி இராஜமன்னார் கூறியதை அந்த மாபெரும் மகா சபை ஆரவாரத்துடன் ஆமோதித்தது.

இவ்வளவு அருமையான கடினமான கலையை இந்த வயதில் இவ்வளவு அழகாகக் கற்று அரங்கேற்றிய ஸ்ரீ குமாரிக்கும், இவ்வளவு நன்றாக அந்தக் கலையை அவளுக்குக் கற்பித்த ஆசிரியர்களுக்கும், குழந்தையைப் பெற்றெடுத்த தாய் தந்தையரான ஸ்ரீமதி சந்திரா, டாக்டர் ராமமூர்த்தி ஆகியவர்களுக்கும், குழந்தை பிறந்தவுடனேயே, "இவள் ஆடப் பிறந்தவள்!" என்று கண்டுபிடித்துச் சொன்ன பாட்டனார் ஸ்ரீ வி. கி. கோபாலரத்தினம் அவர்களுக்கும், இவ்வளவுக்கும் மூலகாரண புருஷரான ரசிக சிரோமணி ஸ்ரீ வி. வி. சீனிவாச அய்யங்கார் அவர்களுக்கும் நமது மனமார்ந்த வாழ்த்துக்கள்!



கனவு நனவாயிற்று!

(சென்ற வாரத் தொடர்ச்சி)

பகீரதன்

பிறகு, இந்தப் பாடசாலைக்கு ஏற்கெனவே பல உதவிகளைச் செய்திருப்பதோடு இப்போது இந்த வானொலிப் பெட்டியைப் பரிசளித்த 'ட்ரோஜன்' அண்ணாமலைச் செட்டியாருக்கு கல்கி வாழ்த்துக் கூறினார். "ஒருவிதத்தில் இந்த 'ட்ரோஜன்' அண்ணாமலை போன்றவர்களால் கெடுதலும் ஏற்படுகிறது. நான் பொது உடைமைக்கொள்கையில் பற்றுக் கொண்டவன். 'உலகத்திலிருந்து பணக்காரர்களையும் முதலாளிகளையும் ஒழித்து விட வேண்டும்' என்று காரசாரமாக எழுத ஆரம்பிக்கும்போது நமது ட்ரோஜன் அண்ணாமலைபோன்றவர்களின் ஞாபகம் வந்து பேனாவை மழுங்கச் செய்து விடுகிறது!" என்றார்.

கடைசியாக, அந்தப் பாடசாலை மாணாக்கர்களைப் பார்த்துக் "கல்கி" கூறியதாவது:—"உங்கள் தலைவர் ஸ்ரீ பாசிலாமணி முதலியார் அடிக்கடி உங்களுக்குச் சொற்பொழிவுகள் ஆற்றுவதற்காகச் சென்னையிலிருந்து பெரிய பெரிய ஆசாமிகளைப் பிடித்துக்கொண்டு வருவது வழக்கம். இனிமேல் அந்தத் தொந்தரவு அவருக்கு இல்லை. இந்த வானொலிப் பெட்டியின் மூலமாக நீங்கள் மிகச் சிறந்த பிரசங்கங்களைக் கேட்கலாம். இந்தப் பெட்டியைச் செப்டம்பர் இரண்டாந் தேதிக்கு முன்னால் என்னைத் திறக்கச் சொல்லியிருந்தால் எனக்கு அவ்வளவு உற்சாகம் இருந்திராது. இந்திய சுதந்திர சர்க்காரின் தலைவர் ஸ்ரீ ஜவாஹர்லால் நேரு பேசிய பிறகு இந்த வானொலிப் பெட்டிக்கே ஒரு புதிய மகிமை உண்டாகி விட்டது. ஸ்ரீ வல்லபாய் படேல், ஸ்ரீ ராஜேந்திர பிரஸாத் முதலியவர்கள் இதன் மூலம் பேசுவார்கள். ஒரு நாள் காந்திஜியே பேசினாலும் பேசுவார்!" என்று சொன்னவுடன் சபையில் பெரிய சந்தோஷ ஆரவாரம் உண்டாயிற்று.

அந்தக் கரகோஷங்களுக்கிடையில் ஆசிரியர் கல்கி ரேடியோவின் சாவியைத் திருகினார். சொல்லி வைத்தாற்போல் ரேடியோவிலும் அப்போது ஒரே கலகலப்பான சிரிப்புச் சத்தம் கேட்டது. ரேடியோவில் அப்போது நடந்து கொண்டிருந்த நாடகத்தில் யாரோ ஒருவர் "கூட்டத்துக்கு வந்திருப்பவர்கள் யாரையும் வெளியில் விடாதீர்கள்!" என்றார். அப்போது ரேடியோப் பெட்டியிலிருந்து வந்த சிரிப்புடன் சபையோரின் குதூகல ஆரவாரமும் கலந்து மண்டபத்தையே ஆட்டமுறச் செய்தது.

★

மாணவர் இல்லத்திற்காகக் காஞ்சிவரம் ரு. கந்தசாமி செட்டியார் ரூபாய் மூவாயிரம் பெறுமானமுள்ள ஒரு மாந்தோப்பை வாங்கி நன்கொடையாக அளித்துள்ளார். அத்தகைய நன்கொடையாளரின் உருவப் படத்தை ஸ்ரீ ரகுராஜ பாரதி திறந்து வைத்து அழகாக ஒரு சிறு பிரசங்கம் செய்தார்.

இதற்குள் மணி ஒன்றுக்குமேல் ஆகிவிட்டது. எல்லாரும் பிரசங்க வெள்ளத்திலே மூழ்கிக் கிடந்தார்கள். உணவு மந்திரி காத்துக் காத்துப் பார்த்தார். கடைசியில் பூஜை வேளையில் கரடியை விட்டது போலப் பிரசங்க வேளையில் ஒரு புலியைக் கொண்டு வந்து விட்டார்! ஒரு மாணவன் புலி வேஷம் போட்டுக் கொண்டு வந்து கூட்டத்தின் நடுவில் 'தொப்' பென்று குதித்தான்! முதலில் எங்களுக்கெல்லாம் சிறிது திகைப்பாகத்தான் இருந்தது. இந்தப் பாடசாலையில் பிள்ளைகளை உற்சாகப்படுத்துவதற்காக நடத்தும் பல காரியங்களில் இம்மாதிரி புலி வேஷம் போட்டுக் கொண்டு விளையாடுவதும் ஒன்று எனத் தெரிந்துகொண்டோம்.

★

மத்தியானம் மறுபடியும் மூன்று மணிக்கு விழா தொடர்ந்து நடைபெற்றது. 'ட்ரோஜன்' அண்ணாமலைச் செட்டியார் தம்முடைய புகழைத் தினந் தினமும் பாடுவதற்கு ஒரு வானொலிப்



சுற்றிலும் நெருப்புப் பந்தம் பற்றி எரியும் வளையத்தை ஒரு சிறுவன் லாகவத்துடன் சுழற்றுகிறான்!

பெட்டியை வாங்கிக் கொடுத்ததோடல்லாமல். பாடசாலை நூல் நிலையத்துக்குச் சுமார் இருபது தமிழ்ப் புத்தகங்களையும் வாங்கிக் கொடுத்திருந்தார்.

தமிழ்ப்பண்ணை சின்ன அண்ணாமலை நகைச்சுவை ததும்பிய ஒரு சிறு பிரசங்கம் செய்துவிட்டு மேற்படி புத்தகங்களைப் பாடசாலையின் நூல் நிலையத்துக்கு எடுத்துக் கொடுத்தார்.

ஸ்ரீ சின்ன அண்ணாமலை மேஜைமீது வைத்திருந்த அழகான புத்தகங்களைக் கையில் எடுப்பதும் அப்படியும் இப்படியும் திருப்புவதும் மறுபடியும் கீழே வைப்பதுமா யிருந்ததைப் பார்த்தால், புத்தகங்களைக் கொடுக்க அவருக்கு மனசே வராதோ என்று தோன்றியது! இத்தனைக்கும், எல்லாப் புத்தகங்களும் தமிழ்ப்பண்ணை வெளியீடுகள்தான்!

பின்னர், ஸ்ரீ டபிள்யூ. பி. இக்னேஷியஸ் அருமையான ஆங்கிலத்திலும், சென்னை நகரசபைக் கல்வி அதிகாரி ஸ்ரீ சங்கரன் அவர்கள் நல்ல தமிழிலும் பிரசங்கம் செய்தார்கள்.

ஸ்ரீ சங்கரன் அவர்களுக்கு நான் மிகவும் நன்றிக் கடன் பட்டிருக்கிறேன். ஒரு கட்டுரையை எழுதுவதைக் காட்டிலும் அதற்குத் தலைப்புக் கொடுப்பதுதான் கஷ்டமான காரியம். ஸ்ரீ சங்கரன் எனக்கு அந்தக் கஷ்டம் இல்லாமல் செய்துவிட்டார். "பத்து வருஷங்களுக்கு முன் இந்தப் பாடசாலையைப் பார்த்துவிட்டு ஆசிரியர் கல்கி 'பாலாறும் பகற்கனவும்' என்ற கட்டுரையை எழுதினார். இப்போது '**கனவு நனவாயிற்று**' என்ற தலைப்புடன் எழுதுவார் என்று நம்புகிறேன்" என்று அவர் கூறியதை, மற்ற எல்லாரையும் விட நான் அதிகமாக ஆமோதித்தேன். ஸ்ரீ சங்கரன் வாழ்க!

பிறகு மாணவர் இல்லத்து உடற் பயிற்சி மந்திரி, மாணவர்களைக்கொண்டு உடற் பயிற்சி விளையாட்டுகள், விரத சாரி விளையாட்டுகள் முதலியவற்றைச் செய்வித்துக் காண்பித்தார். "வீமனைப் போல் உடல் வலிமை வேண்டும்" என்னும் ஸ்ரீ சுத்தானந்தரின் அருள் மொழி, அந்த விழாப் பந்தலின் ஒரு தூணில் விளங்கிக்கொண் டிருந்தது. அதை நிறைவேற்றுவதற்குப் பாடசாலை அதிகாரிகள் பெருமுயற்சி செய்திருக்கிறார்கள் என்பது தெரியவந்தது.

சிலம்ப விளையாட்டு; பந்தம் சுழட்டுதல்; யோகாசனங்கள்; மாணவர்களைப் படிப்படியாகத் தோள்மீது ஏறச்செய்து நிறுத்திக் கோபுரங்கள் கட்டுதல்; பல்டி அடித்தல்; பாய்ந்து தாண்டுதல் முதலிய விளையாட்டுகளைப் பிள்ளைகள் வெகு நன்றாகச் செய்து காண்பித்தார்கள்.

திடீரென்று அந்தக் கூட்டத்தில் ஒரு குறத்தி பிரவேசித்தவுடன் ஒருவருக்கும் ஒன்றும் புரியவில்லை. எல்லாரும் அதைப் பற்றி ஆச்சரியப்பட்டுக் கொண்டிருக்கும் போது குறத்தியைத் தேடிக்கொண்டு ஒரு குறவனும் வந்து விட்டான்! இதென்னடா வம்பு என்று எண்ணிக் கொண்டு, "இவர்களை எதற்காக இங்கே விட்டார்கள்?" என்று ஸ்ரீ மாசிலாமணி முதலியாரைக் கேட்பதற்காக அவர் பக்கம் நோக்கினோம். "இவர்களும் மாணவர்கள்தான். மாறுவேடம் பூணும் கலையையும் இவர்களுக்குக் கற்பித்திருக்கிறோம்" என்று முதலியார் சொல்லி எங்களுக்கு இன்னும் ஆச்சரியத்தை உண்டாக்கி விட்டார்.

*

பிறகு மாணவர் இல்லத்துப் பிரதம மந்திரி மற்ற மந்திரிகள் புடைசூழச் சபையில் அமர்ந்து வாதப்போர் நடத்திக் காண்பித்தார். அத்துடன் ஒரு சிறு நாடகமும் நடந்தது. வெறும் ஏட்டுப் படிப்பை மட்டும் படித்துவிட்டுப் பண்டிதர்களாகி உலக வாழ்க்கையே தெரியாமல் ஒரு நாள் முழுவதும் பட்டினி கிடந்த புலவர்களின் கதியையும், காலத்திற்குத் தகுந்தாற்போல் உலகத்தோடு ஒத்துப் போவது தான் வாழ்க்கை என்னும் கருத்தையும் அழகாக நடித்துக் காண்பித்தார்கள்.

நாடகம் முடிந்ததும் விளம்பர மந்திரி மேடைமேல் வந்து நின்று அந்தப் பள்ளிக்கூடத்தைப் பற்றி விளம்பரப் படுத்தினார். "எங்கள் பள்ளிக்கூடம் 4-9-1916ம் ஆண்டில் ஒரு சிறிய கோயிலில் நான்கு மாணவர்களையும் ஓர் ஆசிரியரையும் கொண்டு

ஆரம்பிக்கப் பட்டது. இப்பொழுது எங்கள் பள்ளிக்கூடத்தில் 700 மாணவர்கள் இருக்கிறோம். எங்கள் வள்ளலார் இல்லத்தில் மட்டும் 400 மாணவர்கள் ஜாதிமத பேதமின்றி ஒன்றாக வாழுகிறோம். எங்கள் 400 பேருக்கும் இல்லத்தில் இலவசச் சாப்பாடு போடுகிறார்கள். சுமார் இரு நூறு ஹரிஜன சகோதரர்கள் எங்கள் 'இல்லத்தில் எங்களோடு சரிசமானமாக வாழ்கிறார்கள். கோயமுத்தூர் மாணவனும் கும்பகோணத்து மாணவனும் மதுரை மாணவனும் மாயவரத்து மாணவனும் தமிழ்நாட்டின் எல்லாப் பக்கங்களிலும் இருந்து வந்த மாணவர்களும் எங்கள் இல்லத்தில் இருக்கிறார்கள். எங்கள் பள்ளிக்கூடமும் மாணவர் இல்லமும் மேலும் மேலும் வளரப் பெரியோர்களாகிய நீங்கள் ஆசி கூறவேண்டும்" என்னும் விஷயத்தை மேலே நான் எழுதியிருப்பதைக் காட்டிலும் இன்னும் அழகான செந்தமிழ் நடையில் எடுத்துக் கூறினார். இன்னும் சில மாணவர்களும் இவ்விதம் அழகாகப் பேசினார்கள்.

★

கடைசியில் 700 குழந்தைகளுக்கு 'அப்பா' வாக விளங்கும் இந்துமத பாடசாலையின் தலைவர் ஸ்ரீ மாசிலாமணி முதலியார் வந்தனோபசாரம் கூற எழுந்தார். (ஸ்ரீ முதலியாரை மாணவர்கள் எல்லோரும் 'அப்பா!' என்று அன்போடு அழைக்கிறார்கள். அவரோ பெற்ற தந்தையைக் காட்டிலும் அதிக அன்போடும் ஆதரவோடும் பிள்ளைகளை வளர்த்து வருகிறார்.)

"உங்கள் காலத்தை நான் அதிகமாக வீணாக்க விரும்பவில்லை. பத்தே நிமிஷந்தான் பேசப் போகிறேன்" என்று முதலியார் ஆரம்பித்தார்.

"இல்லை, இல்லை! எங்கள் காலத்தை நீங்கள் தாராளமாக வீணாக்கலாம். அதற்கு உங்களுக்குப் பூரண உரிமை கொடுக்கிறோம்" என்று சபையோரும் மேடையிலிருந்த பிரமுகர்களும் வற்புறுத்திச் சொன்னார்கள்.

"அதெல்லாம் முடியாது. நான் சொன்னால் சொன்னபடிதான் செய்வேன். பத்து நிமிஷத்துக்கு மேல் எடுத்துக் கொள்ள மாட்டேன். எங்கள் பள்ளிக்கூடத்தையும், மாணவர் இல்லத்தையும் வந்து பார்த்து வாழ்த்துக் கூறிய உங்கள் எல்லாருக்கும் நன்றி கூறுகிறேன். முகத்துக்கு முன்னால் உங்களைப் புகழ்வதை நீங்கள் விரும்பமாட்டீர்கள். ஆனால் நன்றி மறப்பது பெரிய பாவம்; என் மனதில் உள்ள நன்றியைச் சொல்லாமலிருக்க முடியாது. அதற்கு நீங்கள் அநுமதிக்கத்தான் வேண்டும். கல்கி ஆசிரியர் பாரதியார் நிதிக்குப் பணம் திரட்டியது பற்றிப் பலர் சொன்னார்கள். பத்து வருஷங்களுக்கு முன் எங்கள் பள்ளிக்கூடத்தைப் பார்வையிட்டு விட்டுச் சென்ற கல்கி 'பாலாறும் பகற்கனவும்' என்ற ஒரு கட்டுரை எழுதியிருந்தார். அதில் 'இந்த ஸ்தாபனத்துக்கு நன்கொடை அளிக்க முடியாதவர்கள் ஒரு இன்ஷியூரன்ஸ் பாலிஸியாவது கொடுங்கள்' என்று எழுதியிருந்தார். அதைப் படித்தவுடனே ஒரு சேலத்துச் செட்டியார் என்னைக் கூப்பிட்டனுப்பி என்னிடம் ரூபாய் முப்பதாயிரத்துக்கு இன்ஷ்யூர் செய்து கொண்டார்! அந்தக் கட்டுரை வெளியானதற்குப் பிறகுதான் எங்கள் பள்ளிக்கூடம் இவ்வளவு வளர்ச்சியடைந்திருக்கிறது என்றால் அது புகழ்ச்சியே இல்லை. உண்மை; உண்மை" என்று சொல்லிவிட்டு ஸ்ரீ ட்ரோஜன் அண்ணாமலை, ஸ்ரீ காஸா சுப்பராவ், காஞ்சிவரம் கந்தசாமிச் செட்டியார் முதலிய அனைவருக்கும் தனித்தனியாக நன்றி கூறினார்.

"எனக்கு வாழ்க்கையில் ஒரு ஆசை இருக்கிறது. எனக்குப் பெயரும் புகழும் ஒன்றும் வேண்டாம். இந்தப் பள்ளிக்கூடத்தின் கட்டிடங்களும், மாணவர் இல்லத்துக் கட்டிடங்களும் மழை காலத்தில் அங்கங்கே ஒழுகுகின்றன. சின்னஞ்சிறு குழந்தைகளாகிய என் மாணவர்களுக்கு நான் கம்பளி முதலிய வசதிகள் செய்து கொடுத்தாலும் சாரல் காற்றைத் தடுக்கும் நல்ல கட்டிடங்களாக இல்லாததால் குழந்தைகள் குளிர் காலத்தில் கஷ்டப்படுகின்றன. அதற்கு ஒரு நல்ல கட்டிடமாகக் கட்டி முடிக்க வேண்டும். என்னுடைய மாணவர்களில் யாராவது ஜவாஹரைப் போலவோ,

வீமனைப் போன்ற உடல்வலிமை பெறுவதற்காகப் பாட்டுடனே விளையாட்டு நடைபெறுகிறது.



வல்லபாய் படேலைப் போலவோ, ராஜாஜியைப் போலவோ வரவேண்டும் என்பதுதான் என்னுடைய ஆசை. நீங்கள் எல்லாரும் ஆசிர்வாதம் செய்தால் ஏன் என் ஆசை நிறைவேறக் கூடாது?'' என்று கேட்டபோது, "ஏன் கூடாது? பேஷாக நிறைவேறலாம்!'' என்றுதான் சபையில் எல்லாரும் எண்ணினார்கள்.

இவ்வளவு விஷயங்களையும் சொல்லிவிட்டு ஸ்ரீ மாசிலாமணி முதலியார் தாம் முன்னால் கூறியதுபோலவே ஒன்பதே முக்கால் நிமிஷத்தில் தமது பேச்சை முடித்துக் கொண்டது அன்றைய அதிசயங்கள் எல்லாவற்றிலும் பெரிய அதிசயமாயிருந்தது.

கடைசியில் மாணவர்கள் எல்லாரும் மகா கவி பாரதியாரின் தமிழ் நாட்டு வாழ்த்துப் பாடலைப் பாடியதும் வைபவம் இனிது முடிந்தது.

*

அன்று சென்னையிலிருந்து எங்களுடனே தமாஷ் பார்ப்பதற்காக வந்திருந்த இரண்டாவது பாரம் படிக்கும் பதினொரு வயதுச் சிறுவன் "இது அல்லவா பள்ளிக்கூடம்!'' என்று தன்னுடைய அபிப்பிராயத்தை மூன்றே வார்த்தைகளில் வெளியிட்டான். எங்கள் எல்லாருடைய அபிப்பிராயத்தையும் அந்த மூன்று வார்த்தைகள் பிரதிபலித்தன என்று சென்னைக்குத் திரும்பி வரும்போது பேசிக்கொண்டு வந்தோம்.

பாடசாலையின் தலைவர் ஸ்ரீ மாசிலாமணி முதலியார் வெளியிட்ட ஆசையைப் பற்றி ஒரு வார்த்தை. அவருடைய பள்ளிக்கூடத்து மாணவர்கள் ஜவாஹரைப் போலவோ, படேலைப்போலவோ, ராஜாஜியைப் போலவோ வருவது நம்முடைய முயற்சியில் இல்லை. அது மாணவர்களின் அறிவையும் திறமையையும் அதிர்ஷ்டத்தையும் பொறுத்திருக்கிறது. ஆனால் இந்து மத பாடசாலையின் கட்டிடங்களும் வள்ளலார் மாணவர் இல்லத்துக் கட்டிடங்களும் காற்றுக்கும் மழைக்கும் அஞ்சாமல் தமிழ் நாட்டு வள்ளன்மையின் பெருமையை எடுத்துச் சொல்லிக்கொண்டு கம்பீரமாக நிற்கும்படி செய்ய நாம் உதவி புரியலாம். அதற்கு முதலியாரின் எல்லையற்ற முயற்சியும் உழைப்பும் இருக்கிறது. எந்த நல்ல காரியத்துக்கும் தளராது கொடுக்கும் வள்ளல்கள் தமிழ் நாட்டில் இருக்கிறார்கள். நமது மாகாணத்தில் பொதுஜன சர்க்கார் நடக்கிறது. ஸ்ரீ அவிநாசிலிங்கம் செட்டியார் கல்வி மந்திரியாக இருக்கிறார்.

இவ்வளவு சௌகர்யங்கள் இருக்கும்போது முதலியாரின் ஆசை ஏன் நிறைவேறாது? இந்து மத பாடசாலைக்கும், மாணவர் இல்லத்திற்கும் அழகியதோர் மாளிகையை ஏன் அமைக்க முடியாது?

வாழ்க வாலாஜாபாத் இந்துமத பாடசாலை! அதன் தலைவர் ஸ்ரீ மாசிலாமணி முதலியார் வாழ்க! வாழ்க!!

* * *

பெண்ணாய்ப் பிறந்தவள்

லல்லு

நிமிர்ந்த நடை, நேர்நோக்கு, புத்திசாலித்தனமான பேச்சு முதலிய குணங்கள் அமைந்த சத்தியபாமா, பெண்மை யழகு மாறாத 'புதுமைப் பெண்' வர்க்கத்தைச் சேர்ந்தவள். 'ஓஹோ' என்னும்படி அழகில்லை யெனினும், பரந்த நெற்றியும் அகன்ற கருவிழிகளும் அவள் புத்திசாலித்தனத்தை எடுத்துக் காட்டி முகத்தை வசீகரமுள்ளதாகச் செய்தன. யதேச்சையாக அவளைக் காணும் யாரும் மற்றுமொரு முறை அவளைத் திரும்பிப் பாராமல் செல்லார்.

செல்வத்திலே பிறந்து செல்வமாக வளர்ந்த பாமாவுக்குப் பதினேழு வயதில் தாயையும் தன்னையும் காப்பாற்றிக் கொள்ள வழி தேடும்படி யாகிவிட்டது.

தகப்பனார் இருந்த வரையில் பங்களா, சமையற்காரன், 'கார்' இவ்வளவு சம்பிரமங்களோடு வாழ்க்கை விமரிசையாக நடந்தது. அவர் தலை சாய்ந்ததும் தாயும் பெண்ணும் சுற்றியிருந்த கடன்களைத் தீர்த்தது போகக் கையில் மிஞ்சின ஆயிரம் ரூபாயுடன் மயிலாப்பூர் 'ஈஸ்டு எண்டு' என்னும்படியான முண்டகக்கண்ணியம்மன் தெரு வட்டாரத்தில் பன்னிரண்டு ரூபாய் வாடகையில் ஒரு 'போர்ஷனை'ப் பார்த்து அங்கு குடி புகுந்தார்கள்.

இவர்களை வைத்து ஆதரிக்க உறவினர் யாருமில்லை. தந்தையின் நண்பரான ராமநாதன் துக்க காலத்தில் முன்வந்து வேண்டிய உதவி புரிந்தார்.

புது வீட்டில் குடி புகுந்த தினம் அவர் பாமாவைத் தனிமையில் அழைத்து, "பெண்டு பிள்ளையில்லாத நான் உங்களை என்னிடம் வைத்து ஆதரிக்க முடியாத வகை இருக்கிறேன். பணக்காரன் என்று பெருமைக்குச் சொல்லவில்லை. உனக்கு எப்பொழுது கஷ்டம் நேர்ந்தாலும் என்னிடம் வெட்கப்படாமல் சொல்ல வேண்டும். இன்னும் உன்னிடம் வேறு ஒரு விஷயமும் சொல்ல வேண்டும். அதற்கு இது தக்க சமயமில்லை. பின்பு பார்த்துக் கொள்ளலாம்!" என்று சொல்லிவிட்டுச் சென்றார்.

புதுவீட்டில் இரவு வெகு நேரம் வரை கண்விழித்துப் படுத்திருந்தாள் பாமா. இனி ஜீவனத்துக்கு வழி தேட என்ன செய்வதென்பதைப் பற்றி அவள் சிந்திக்கலானாள். 'இண்டர்' வரையிலும் படித்திருந்த அவளுக்கு உபாத்திமைத் தொழில் ரஸமில்லாததாகத் தோன்றியது. வேறு என்ன செய்வது? ராமநாதனைக் கல்யாணம் பண்ணிக் கொள்ளவா? அவர் இன்று பேசியதிலிருந்து அந்த எண்ணம் அவருக்கு உண்டு எனத் தோன்றுகிறது. அவரை மணந்து கொண்டால் அம்மாவையும் என்னையும் வைத்து ஆதரிப்பதோடு திருப்தியடைந்து விடுவாரா? அவருடன் தாம்பத்ய வாழ்க்கையும் நடத்தவேண்டுமே! அவருடைய அணைப்பில்......? பாமாவின் உடல் சிலிர்த்தது. பின் கழுத்துச் சதை மடிப்பும், முன் தலை வழுக்கையும், பருத்து உயர்ந்த தேகமும் கொண்ட நாற்பது வயதான ராமநாதனின் தோற்றம் அவள் மனக்கண்ணில் தோன்றி, அவள் இளமைத் தாகத்துக்கு உப்புத் தண்ணீரைக் கொடுப்பது போல் இருந்தது!

மறுநாள் பாமா முதல் காரியமாக ராமநாதனைக் கண்டு தன் தீர்மானத்தைத் தெரிவித்தாள். அவர் அதை ஆமோதித்ததுடன் நில்லாமல் தமக்குத் தெரிந்த ஒரு 'ஷார்ட் ஹேண்டு அண்டு டைப்ரைடிங் இன்ஸ்டிட்யூட்'டில் அவள் பயிற்சி பெறுவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து, தம் 'மெஷின்' ஒன்றையும் அவளுடைய வீட்டுக்கு அனுப்பி வைத்தார்.

உத்தியோகம் பார்க்கக்கூடிய திறமை ஏற்பட்டதும் ராமநாதன் சிபாரிசின் பேரில் யுத்தகால ஸ்தாபன மொன்றில் பாமாவுக்கு 'ஸ்டெனோ-டைபிஸ்டு' வேலை கிடைத்தது.

★

பாமாவின் காரியாலயத்தில் அவளைத் தவிர எஸ்தர் வில்லியம்ஸ் என்ற ஓர் ஆங்கிலோ—இந்திய மாதும் வேலை பார்த்து வந்தாள்.

பாமா உத்தியோகத்துக்கு வந்த பத்துப் பன்னிரண்டு நாட்களில் கங்காதரன் என்பவன் உதவி மானேஜராக நியமிக்கப்பட்டான். வயது இருபத்தெட்டு,

முப்பது இருக்கும். அழகும் வசீகரமும் பொருந்திய முகம். தன் 'ஆஸ்டி'னை விட்டு இறங்கி ஆபீஸுக்குள் நுழையும் போதே ஒரு சிறு கூட்டம் பிரவேசித்தாற் போன்ற கலகலப்பை அவன் உண்டாக்குவான். ஹாஸ்யப் பிரியன். யாரையும் வசியப்படுத்தும் வல்லமையுள்ளவன். வேற்றுமை பாராட்டாமல் எல்லோரையும் சமமாகப் பாவித்துத் தாராளமாய்ப் பழகுவான். வேலையிலும் வெகு கெட்டிக்காரன்.

சில நாள் வரையிலும் பாமா, எஸ்தர் இவர்கள் இருக்கும் திக்கை அவன் நோக்குவதில்லை. இவர்கள் ஒரு கும்பிடு போட்டால் அவன் ஒரு பதில் கும்பிடு போட்டு விட்டுப் போய்விடுவான். "யோக்கியனாயிருக்கிறான்! ஒருவரோடொருவர் மிகுந்த மரியாதையுடன் பழகினாலும் நம் ஜனங்கள் ஏதாவது தப்புக் கற்பிப்பார்கள். விலகியிருப்பதே நல்லது!" என்று பாமா எண்ணினாள்.

இவள் இப்படி நினைத்தாளோ என்னவோ, மறுநாள் காலை கங்காதரன் ஆபீஸுக்கு வந்ததும் நேரே பாமா இருக்குமிடம் சென்று அவளிடம் ஒரு காகிதத் துண்டைக் கொடுத்து, "மிஸ் சத்தியபாமா! இந்தக் குறிப்பு எந்த லெட்ஜரில் பதிவு செய்யப்பட்டிருக்கிறதென்று தேடிப் பிடியுங்கள். நான் பதினைந்து நிமிஷங்களில் வருகிறேன்!" என்று சொல்லிவிட்டுப் போனான்.

பாமா புத்தகங்களையெல்லாம் ஒவ்வொன்றாகப் புரட்டித் தேடிப் பார்த்தாள்; எதிலும் அகப்படவில்லை. மேல் அலமாரியிலிருந்த லெட்ஜர் ஒன்றுதான் பாக்கி. அவளுடைய கைக்கு அது எட்டவில்லை. இந்தத் தர்ம சங்கடத்தில் கங்காதரன் வந்து சேர்ந்தான். அவன் சிரித்துக்கொண்டே அந்த லெட்ஜரை எடுத்துக் கொடுக்க, இருவருமாகப் பக்கங்களைப் புரட்டிப் பார்த்தார்கள்.

சிறிது நேரத்திற்கெல்லாம் "இதோ இருக்கிறது!" என்று சொல்லி, அந்த லெட்ஜரை எடுத்துக்கொண்டு தன் அறைக்குச் சென்றான் கங்காதரன்.

அன்று மாலை நான்கு மணியிருக்கும். அவரவர் வேலையை முடித்துக்கொண்டு வீடு செல்லக் கிளம்பினர். அப்பொழுது ஆபீஸ் பையன் பாமா இருக்குமிடம் வந்து அவளைக் கங்காதரன் கூப்பிடுவதாகச் சொன்னான். அவள் அவனைக் காணச் சென்றாள். கங்காதரன், அவளிடம் ஒரு காகிதத்தைக் கொடுத்து, "இதில் ஒரு இருபது நகல்கள் அவசரமாக வேண்டும். தயவு செய்து ஆறு மணி வரை இருந்து இந்தக் காரியத்தைச் செய்துவிட்டுப் போங்கள்!" என்றான்.

பாமாவுக்குப் பற்றிக்கொண்டு வந்தது! பல்லைக் கடித்துக் கொண்டு வேலையை ஆரம்பித்தாள். மணி ஐந்து, ஐந்தரை; ஆறு! நாலைந்து நகல்களே பாக்கி. அப்பொழுது கங்காதரன் தன் அறையிலிருந்து வெளியே வந்து, "எனக்குக் கை ஒழிந்திருக்கு!" என்று சொல்லி, ஒரே நிமிஷத்தில் பாக்கியிருந்த நகல்களையெல்லாம் எடுத்து விட்டான்.

டைப் அடிக்கப்பட்ட காகிதங்களையெல்லாம் சீர்படுத்தி வைத்துவிட்டுப் பாமா தன் வீட்டுக்குக் கிளம்பினாள்.

"பையனைக் காப்பி, டிபன் கொண்டு வரச் சொல்லியிருக்கேன். சாப்பிட்டதும் என் காரிலேயே உங்களைக் கொண்டு போய் வீட்டில் விட்டு விடுகிறேன்!" என்றான் கங்காதரன்.

"ரொம்ப வந்தனம்; தங்களுக்குச் சிரமம் கொடுக்க நான் விரும்பவில்லை. வழக்கம்போல் டிராமிலேயே போய் விடுகிறேன்!" என்று சொல்லிவிட்டுப் பாமா போய் விட்டாள்.

ஒரு நிமிஷம் இமைகொட்டாமல் அவளையே வெறித்துப் பார்த்துக் கொண்டு நின்றான் கங்காதரன்.

★

ஒரு நாள் காரியாலயத்தில் காலை மணி பதினொன்றாகியும் மானேஜர் வராததால், சிப்பந்திகள் வேலை துவக்காமல் தங்களுக்குள் கங்காதரனைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தார்கள்.

அகௌண்டெண்ட் வடிவேலு முதலியார் ஹெட் கிளார்க்கைப் பார்த்து, "என்ன, ஐயங்கார் ஸ்வாமிகளே! பையன் இன்னும் வரக் காணோம் போலிருக்கிறது!" என்றார்.

ரங்கசாமி ஐயங்கார் குடுமியைத் தட்டி முடிந்து கொண்டு, "அவனுக்கென்ன ஐயா தகப்பனார் வைத்துவிட்டுப் போன சொத்தைக் குஷியாய்க் கரைக்கிறான். வேலையில் திறமை இருக்கிறது. இருந்து என்ன பிரயோசனம்? ஓர் இடத்திலாவது நிலைக்க மாட்டேன் என்கிறான்!" என்றார்.

"இது மாதிரி பயல்களுக்கு ஒரு பெண்ணைக் கட்டிப் போட்டால் தானே புத்தி வரும், ஸார்!" என்றார் முதலியார்.

"பெண்ணைக் கட்டவாவது! வயசு முப்பதாகிறது, யோக்கியனாயிருந்தால் பெண்ணைப் பெற்றவன் இவனைச் சும்மா

விட்டு வைத்திருப்பானா? 'டீக்கா டீரஸ்' பண்ணிக் கொள்கிறான் — போகட்டும்: சிகரெட்டு குடிக்கிறான் — அதையும் க்ஷமிக்கலாம். ஒரு வேளை குடி, கூத்தி..." என்று அதுவரை உச்சஸ்தாயியில் பேசிக் கொண்டு வந்த ஐயங்கார், திடீரென்று கீழ் ஸ்தாயிக்கு இறங்கினார்.

இந்தச் சமயத்தில் முதலியார் அவசர அவசரமாகப் பாமாவைக் கடைக் கண்ணால் பார்த்துக் கொண்டே தம் இருப்பிடத்தை விட்டு எழுந்து வந்து ஐயங்கார் காதோடு காதாக ஏதோ சொன்னார். பிறகு எல்லோருக்கும் கேட்கும்படியாக, "பொம்பிளைங்க இருக்காங்க, அந்தப் பேச்செல்லாம் என்னத்துக்குங்க? விடுங்க, ஸார்!" என்றார்.

பாமாவுக்கு ஆயிரந் தேள் ஏக காலத்தில் கொட்டினாற் போன்ற வேதனை உண்டாயிற்று. அவள் தன் விதியை நொந்துகொண்டே வேலையைக் கவனித்தாள்.

கங்காதரன் பன்னிரண்டு மணிக்கு மேல் வந்தான். இடை வேளை எல்லோரும் சாப்பாட்டுக்குச் சென்றிருந்தனர். சத்தியபாமா தன் இடத்திலேயே உட்கார்ந் திருந்தாள். கங்காதரன் அவளிடம் வந்து மிகவும் தாழ்ந்த குரலில், "பாமா! நான் உன்னிடம் பேசக் கூட இடங் கொடாமல் ஏன் என்னைக் கண்டாலே ஓடி ஒளிகிறாய்?" என்றான்.

"தங்களிடம் பேசிக் கொண்டிருப்பதற்காக நான் இங்கே வரவில்லை; நாதியற்ற என் விதவைத் தாயையும் என்னையும் காப்பாற்றிக் கொள்வதற்காக வேறு வழியின்றி நான் இங்கு வேலை செய்வதற்காக வந்தேன்! ஆனால், தங்களைப் போன்றவர்கள் நிறைந்த இந்தப் பாழாய்போன சமூகத்தில் என்னைப் போன்ற அபலைகள் கௌரவத்துடன் வேலைசெய்து பிழைக்க முடியாது என்பது இப்போது தெரிந்து விட்டது. போய் வருகிறேன்!" என்று படபடப்புடன் கூறி, அந்த நிமிஷமே ஒரு ராஜீனாமாக் கடிதத்தை எழுதி அவனுக்கு முன்னால் வீசி எறிந்துவிட்டு, வீடுவந்து சேர்ந்தாள் பாமா.

விளக்குக்கூடப் பொருத்தி வைக்காமல் வீடு இருண்டு கிடந்ததைக் கண்டதும் அவளுக்குப் 'பகீர்' என்றது. சுற்று முற்றும் பார்த்தாள். படுக்கை அறையிலிருந்து முனகல் சத்தம் வந்தது. உள்ளே ஓடினாள். அவளுடைய தாயார் நிமோனியா ஜுரத்துடன் போராடிக் கொண்டிருந்தாள். பாமாவும் ராமநாதனும் எவ்வளவோ பாடுபட்டும் பலனில்லாமல் போயிற்று.

கிறிஸ்துமஸ் விடுமுறையில் எல்லோரும் பாட்டுக் கச்சேரி விழாக்களுக்கும், கண்காட்சிச் சாலைகளுக்கும் புறப்படும் மாலை வேளையில் பாமாவின் தாயார் பரலோகம் போய்ச் சேர்ந்தாள்.

பாமா தன்னுடைய வேலையை ராஜீனாமாச் செய்துவிட்ட சேதியை அறிந்துங்கூட ராமநாதன் அவள்மேல் வைத்திருந்த அன்பு குறையவில்லை.

அன்று ஞாயிற்றுக்கிழமை. பாமா தன் வருங்கால வாழ்க்கையைப் பற்றிச்



சிந்தித்துக்கொண்டே கண்ணீர் விட்டபடி படுக்கையில் குப்புற விழுந்து கிடந்தாள்.

அச்சமயம் அவளைக் காண வந்த ராமநாதன் அவள் இருக்கும் அலங்கோலத்தைக் கண்டு, "ஏன் அழுகிறாய்?" என்று பரிவுடன் கேட்டார்.

பாமாவின் அழுகை இன்னும் அதிகமாயிற்று. ராமநாதன் அவளருகில் அமர்ந்து அவளை எழுந்து உட்காரச் சொன்னார். அவளும் எழுந்து உட்கார்ந்தாள்.

"பாமா! நான் உயிரோடு இருக்கும் வரை நீ அழுவதற்கு ஒரு காரணமும் இல்லையே! ஏன் அழுகிறாய்? நான்தான் உன்னிடம் ஏற்கனவே 'உனக்கு என்ன கஷ்டம் வந்தாலும் என்னிடம் வெட்கம் இல்லாமல் சொல்; நிவர்த்தி செய்து வைக்கிறேன்' என்று சொல்லியிருக்கிறேனே! ஒரு வேலை வாழ்க்கையில் என்னுடைய உதவியைப் பெற்று ஜீவிப்பதற்கு உனக்கு வெறுப்பாயிருக்கிறதா? இல்லை, வெட்கமாயிருக்கிறதா? அப்படியானால், நானேக்கே உனக்கு வேறு எங்கேயாவது வேலை பார்த்து வைத்து விடுகிறேன்......!" என்று ஆரம்பித்தார் ராமநாதன்.

"வேண்டாம்; வேண்டவே வேண்டாம்! நான் பெண்ணாய்ப் பிறந்தவள் எப்படித்தான் இருந்தாலும் நான் தனிமையில் அமைதியைக் காண்பது துர்லபம்! அப்படியே கண்டாலும் இந்தப் பத்தாம் பசலி சமூகமும், சகோதரத்வமற்ற வாலிப உலகமும் என்னைச் சும்மா விடாது! ஆகவே இனி நான் யாராவது ஒரு புருஷனின் துணை கொண்டு கௌரவமாக வாழ்வதென்று முடிவு செய்து விட்டேன். அந்தப் புருஷன் நீங்களாகவே இருப்பதிலும் எனக்கு இப்போது ஒன்றும் ஆக்ஷேபணையில்லை!" என்றாள் பாமா ஆவேசத்துடன்.

"நிஜமாகவா, பாமா!" என்று அளவில்லாத வியப்புடன் கேட்டுக் கொண்டே அவளை நெருங்கினார் ராமநாதன்.

எத்தனையோ நாட்களுக்குப் பிறகு ஏகாந்தத்திலிருந்து விடுபட்ட பாமாவுக்கு, ராமநாதனின் பருத்த தோற்றம் இப்பொழுது வெறுப்பை யளிக்கவில்லை.

காலக்ஷேபம்

ரயில் பிரயாணி:—ஸார், உங்கள் பெட்டியைக் கொஞ்சம் வழியை விட்டு எடுக்கிறீர்களா? எல்லோரும் தடுக்கி விழுகிறார்கள்!

இன்னொரு பிரயாணி:—இருக்கட்டும், இருக்கட்டும். வேண்டுமென்றுதான் வைத்திருக்கிறேன். எனக்கு ஞாபகமறதி அதிகம். யாராவது தடுக்கி விழுவதைப் பார்த்தாலாவது பெட்டியின் ஞாபகம் வரும் அல்லவா?

கம்பெனியில் விற்பவர்:—இந்த ஜமக்காளத்தை நான் உங்களுக்குக் 'காட்லாக்' விலையில் பாதி விலைக்குத் தருகிறேன்.

வாங்குபவர்:—சரி, ரொம்ப சந்தோஷம். 'காட்லாக்'கின் விலை என்ன?

"என்ன ஐயா இது? மணி பன்னிரண்டு தானே ஆகிறது? நாலு மணி வண்டிக்கு இப்பவே கிளம்பி விட்டீரே!"

"ஆமாம், நான் ஏதாவது சாமானை மறந்து வைத்து விடுவேன். சட்டென்று ஒரு தரம் இரண்டு தரம் வீட்டுக்கு வந்து மறந்த சாமானை எடுத்துக் கொண்டு போவதற்கு அவகாசம் வேண்டும் பாருங்கள்; அதற்காகத்தான் முன்னதாகக் கிளம்புகிறேன்!"

"டாக்டர் ஸார்! இந்த மாத்திரை இருமலைக் குணப்படுத்தும் என்று கூறுகிறீர்களே, அதற்கு அத்தாட்சி யிருக்கிறதா?"

"ஓ, பேஷாய் இருக்கிறது! நானே இருமல் வியாதிக்காக இந்த மாத்திரையைப் பத்து வருஷங்களாகச் சாப்பிட்டு வருகிறேன்!"

நாடகமேடை அரசன்:—மந்திரி! வஸந்த மண்டபம் கட்டுவதற்குக் கல் கிடைக்கவில்லை என்றீரே, கிடைத்துவிட்டதா?

மந்திரி:—அரசே, கல்லைப் பற்றி நீங்கள் கவலைப்பட வேண்டாம். உங்கள் வாயைத் திறந்து ஒரு பாட்டுப் பாடினால் போதுமே!

"என்னமோ பிரமாதமாகத் தேசம், தேசம் என்று பேசுகிறாய்! நீ தேசத்துக்காக இதுவரையில் ஒரு துரும்பையாவது எடுத்துப் போட்டதுண்டா?"

"என்ன அப்படிச் சொல்லி விட்டாய்! ஹாம், துரும்பு என்ன? அநேக அரசியல் கூட்டங்களில் பெரிய கல்லையே தூக்கிப் போட்டிருக்கிறேனே!"


இந்தியாவின் மற்ற பாகங்களைப் போலவேயே ராஜபுத்தானாவிலும் தேனீர் அருந்தும் வேளையில் குடும்பத்திலுள்ளவர்கள் ஒன்று கூடுவது வழக்கம்.
சதா புது மணங்கமழும் ப்ரூக்பாண்ட் தேயிலையையே ஒவ்வொரு குடும்பமும் ஆவலுடன் விரும்புகிறார்கள்.
ப்ரூக் பாண்ட்
"இரு இலையும் ஒரு மொட்டும்"



இந்த இயற்கை டானிக் ஆகாரம், அன்றாடப் பங்கீடு முறையில், ஜீவ தாரத் தாது உப்புக்களைக் கொண்டு — உங்கள் தேகாரோக்யத்தை புதிப்பிக்கிறது. இவ்விதம் ஒருங்கே சேர்க்கப்பட்ட ஆகாரத் தாதுக்களின் மதிப்பு மிகவும் பிரமாதம். உதாரணமாக, ஒரு நாள் உட்கொண்டால் — 7 முட்டைகளிலுள்ளளவு கால்ஷியத்தையும், 23 பவுண்டு ஆரஞ்சில் உள்ளளவு இரும்புத் தாதுவையும் — 4 பவுண்டு வெண்ணெயிலுள்ளளவு பாஸ்பரத்தையும் உங்களுக்கு அளிக்கிறது. மேலும், அவசியமான 12 தாது உப்புக்களில் ஒன்பதும், ஆயோடின் ஆகாரமும் அடங்கியுள்ளது — விக்கல்ப்.

இந்த உயர்ந்த தாதுப் பொருள்களும் வைடமின்களும் தேகாரோக்யத்தின் ஐக்யமாகும்போதே — நாளடைவில் புதிய போஷாக்கை அளிக்கின்றன. நீங்கள் வளர ஆரம்பிக்கிறீர்கள். நரம்புகள் உறுதிப்படுகின்றன. களைப்பு — வீர்யமாகவும், பலஹீனம்—பலமாகவும் மாறுகின்றன. புதிய ஜீவ சக்திக்கும் — சுகாதாரத்திற்கும் மார்க்கத்தைக் காண்கிறீர்கள்

VIKELP MINERAL TABLETS

விக்கல்ப் தாது பில்லைகள்

Ad. No. 5436

சமயத்தில் வேண்டுவது பலசாலியான மனிதரே!




ஒரிஸ்ஸா, நைஜாம் சமஸ்தானங்கள், ஆந்திர ஜில்லாக்கள் தமிழ் நாடுகளுக்கு ஏஜண்டுகள் :

ஸ்ரீ ராமா ஜெனரல் ஸ்டோர்ஸ்

பேஷாம்பூர். செகந்திராபாத்.

பெஜவாடா. மதுரை


புதிய
வீடு
கட்டுகிறீர்களா?
60 Designs for your new home
தி கான்க்ரீட் அஸோஸியேஷன் ஆப் இந்தியா,
199, பேஸண்ட் ரோட், மதராஸ்.
"புது வீட்டின் 60 மாதிரி பிளான்கள்" என்ற வெளியீட்டின் . . . . பிரதி/பிரதிகள் எனக்கு தயவு செய்து அனுப்பவும். தபால்செலவு உள்பட கிரயத்திற்காக ரூ . . அனுப்பியிருக்கிறேன்.
பெயர் ----------------------------

விலாசம் ----------------------------
MK ----------------------------
. . அப்படியானால் கீழ்க்கண்ட வெளியீட்டிற்கு எழுதுங்கள்.
★ 60 பிளான்களும் அவைகளின் சுமாரான விலைமதிப்பும்.
★ முழுதும் வர்ணப்படங்கள்.
★ விலை ரூ. 2/- (தபால் செலவு அணா 0-5-0 பிரத்தியேகம்.)
தி ஸிமெண்ட் மார்க்கெட்டிங் கம்பெனி ஆப் இந்தியா லிமிடெட்.
CML. 122 A-Tamil.

காளிங்க நர்த்தனம்

எஸ்.வி.எஸ்

நான் இங்கிலாந்தில் வைத்தியப் படிப்புக்காகச் சில காலம் தங்க நேர்ந்த போது ஸ்ரீமதி மார்க்கரட் வில்லியம்ஸ் வீட்டுக்கு அடிக்கடி போவதுண்டு. அவருக்குச் சுமார் அறுபது வயதிருக்கும். உடல் சற்றுத் தளர்ந்தாற் போல் தோன்றினாலும் உள்ளத்தில் உற்சாகம் குறைவதே கிடையாது. வந்தவர்களைப் புன்னகையுடன் அவர் வரவேற்கும் காட்சியே ரொம்ப சுகமாக இருக்கும்.

ஸ்ரீமதி மார்க்கரட் வில்லியம்ஸ் சில காலம் இந்தியாவில் தங்கியதால் அவருக்கு இந்தியர்கள், இந்தியப் பண்பாடு, இந்தியர் கலை முதலியவற்றில் மிக்க ஈடுபாடு உண்டு. அவருடைய வீட்டில் பல நடராஜ உருவங்களும், இந்தியச் சிற்பங்களும் சித்திரங்களும் இடம் பெற்றிருக்கும். அந்த அம்மாள் வீட்டுக்கு நான் போய்ச் சேர்ந்தால் மணிக்கணக்காக இந்தியாவைப் பற்றியும் சிற்பங்களைப் பற்றியும் பேசிக் கொண்டிருப்பார். அந்த வீட்டு முகப்பில் ஒரு அழகிய தந்தப் பெட்டி இருந்தது. பல நாட்களாக அதைத் திறந்து பார்க்க வேண்டும் என்று எனக்கு ஆசை. அதைத் தொட்டால் ஒருவேளை அந்த அம்மையார் தவறாக நினைத்துக் கொள்வாரோ என்று பயந்து சும்மா இருந்து விடுவேன். ஆனால் ஒருநாள் என் ஆத்திரம் தாங்கவில்லை. அந்தப் பெட்டியைத் திறந்தேன். அதில் ஏதோ உடைந்து போன மண் பொம்மைத் துண்டங்கள் கிடந்தன! அந்தப் பெட்டி மூடியின் உள் பக்கத்தில் பின்வருமாறு எழுதியிருந்தது.

"உயர்ந்த எண்ணங்களை உலகத்துக்களித்த தோடன்றி, அதைவிடப் பல மடங்கு உயர்ந்த முறையில் அந்த எண்ணங்களுக்குக் கலை வடிவங்கள் அமைத்த பாரதத்தாயின் மண்!"

முதலில் பிரமாதமாகப் புகழ்ந்து விட்டுக் கடைசியில் 'மண்' என்று மொட்டையாக முடித்திருந்தது என் மனசுக்கு வேதனையளித்தது.

இந்தச் சமயத்தில் ஸ்ரீமதி மார்க்கரட் என்னை வரவேற்க உள்ளேயிருந்து வந்தாள். "இது என்ன, இதில் உடைந்த பொம்மை கிடக்கிறது. அதற்கு 'மண்' என்று வியாக்யானம் அளித்திருக்கிறீர்கள். ஒன்றும் புரியவில்லையே!" என்றேன். அவர் சற்று யோசித்தார். பிறகு "இதைப்பற்றி யாரிடமும் நான் பிரஸ்தாபிப்பதில்லை. இந்த வெள்ளைக்காரர்களுக்கு இதைப் பற்றிச் சொன்னால் புரியாது. ஆனால் நீங்கள் இந்தியர். உங்களுக்குப் புரியும். இதற்குள் அடங்கியிருக்கும் விருத்தாந்தம்" என்று சொல்லிக் கதையை ஆரம்பித்தார் ஸ்ரீமதி மார்க்கரட் வில்லியம்ஸ். நான் கேட்பதற்குத் தயாரானேன்.

*   *   *

எனக்கு இப்போது வயது கிட்டத்தட்ட அறுபது ஆகிறது. சுமார் நாற்பது வருஷத்துக்கு முந்தைய நிலவரத்தைச் சொல்லுகிறேன். அப்போதெல்லாம் 'இங்கிலாந்திலேயே வில்லியம்ஸ்தான் சிறந்த சித்திரக்காரன்' என்று பெயர் விளங்கியிருந்தது. அவருடைய சித்திரங்கள் பெரும்பாலும் இயற்கை வனப்பைச் சித்திரிப்பவை. அவற்றை நல்ல பணங் கொடுத்து ஜனங்கள் வாங்கினார்கள்.

ரொம்ப நாளாகி விட்டதால் இப்போது எனக்கு நிச்சயமாகச் சொல்ல முடியவில்லை. — முதலில் எனக்கு அவருடைய சித்திரத்தின்மேல் காதல் ஏற்பட்டதா அல்லது அவர் மேலா?—என்பதுதான் அது. எப்படியானால் என்ன? எனக்கு அவர் மேலும் அவருடைய சித்திரத்தின் மேலும் காதல் இருந்தது. அவருக்கும் என்மேல் காதல். எங்கள் பெற்றோரைக் கேட்டோம். கல்யாணத்துக்குச் சம்மதித்து விட்டார்கள்.

கல்யாணத்திற்குப் பிறகு நாங்கள் எவ்வளவோ இன்பமாகவும் ஒற்றுமையுடனும்தான் காலம் கழித்தோம். ஆனால் நாளடைவில் வில்லியம்ஸின் கலையுலகில் ஒரு மாறுதல் காணப்பட்டது. அவர் இயற்கை எழிலைத் தீட்டுவதை விட்டு விட்டு, உலகில் மனிதன் படும் கொடுமைகளைச் சித்திரிக்க ஆரம்பித்தார். கால் வயிற்று ரொட்டித் துண்டுக்கு அவதிப்படும் ஏழையை மிக பூர்வமாகச் சித்திரித்தார்; நாளெல்லாம் உழைத்தும் வாழ்க்கையில் நிம்மதியைக் காணாத பாட்டாளியைச் சித்திரித்தார்.

அவருடைய புகழ் எங்கும் பரவியது. எனக்கு இதெல்லாம் கொஞ்சங் கூடப் பிடிக்கவில்லை. "கஷ்டத்தைக் கண்முன்னால்தான் பார்க்கிறோமே. அதைச் சித்திரத்தில் கூடவா பார்க்கவேண்டும்!" என்பேன்.

"உலகமெல்லாம் ஒரே துன்ப மயமாக இருக்கும்போது வேறு எதைப்பற்றித்தான் எழுதுவது?" என்பார்.

"பொழுதெல்லாம் உழைத்து வீட்டுக்குப் போகும் பாட்டாளி, புன்னகை பூத்த முகத்துடன் தன்னை எதிர்கொண்டழைக்கும் புதல்வனைக் கண்டு உள்ளம் குளிரவில்லையா? அந்தக் காட்சி தங்கள் சித்திரத்துக்கு உகந்ததாகாதா?" என்பேன்.

"அது என்ன, நாழிகை! மற்ற நேரம் எல்லாம் துக்கந்தானே?" என்பார்.

"வாஸ்தவம்" என்பேன்!

கடைசியில் இப்படி யெல்லாம் பேசி அவரை என் வழிக்குத் திருப்ப முடியாது என்பதை நான் உணர்ந்தேன். அதற்குப் பிறகு எங்கள் வாழ்க்கையே ரஸமற்றுப் போய்விட்டது. அவருடன் ஒரு விதத்திலும் ஒத்துணராமல் காலங் கழிப்பது முடியாத காரியம் என்று கண்டேன். ஆகவே, அவரை விட்டுப் பிரிந்து உலகப்பிரயாணம் செய்தேன்.

நான் ஊர் ஊராகத் தேசம் தேசமாகச் சுற்றிக் கொண்டிருந்த போதிலும் என் பேதை யுள்ளம் வில்லியம்ஸைப் பற்றிய கவலையில் எப்பொழுதும் ஆழ்ந்திருக்கும். சில சமயம் முக்கியமான ஊர்களில் சென்று வில்லியம்ஸின் க்ஷேமலாபங்களை விசாரித்துக் கடிதம் எழுதுவேன். பிறகு அந்த ஊரிலேயே 'வில்லியம்ஸிடமிருந்து ஒரு பதில் வராதா?' என்று ஒரு வாரம், இரண்டு வாரம், மூன்று வாரம் தங்குவேன். ஆனால் ஒரு பதிலும் வராது.

"சரி; அவ்வளவுதான் நாம் கொடுத்து வைத்தது" என்று தீர்மானித்துக் கொண்டு மேலே என் பிரயாணத்தைத் தொடர்ந்து நடத்துவேன்.

இப்படி இரண்டு வருஷங்கள் கழிந்தன. கடைசியாக உங்கள் தாய்நாட்டிற்கு வந்தேன். கலைக் கூடமாக விளங்கும் தென்னாட்டில் நான் என்றும் அனுபவியாத ஓர் ஆனந்தத்தைப் பெற்றேன்.

சென்னை அடையாற்றிலிருக்கும் தியஸாபிகல் ஸொஸைடியில் நான் தங்கியிருந்தேன். அப்போது அதற்குத் தலைவராக இருந்தவர் எனக்கு உற்ற நண்பர். அவருடன் நான் தங்கியிருந்தபோது, மயிலாப்பூரிலிருந்து ஒரு பிரபல வக்கீல் வீட்டுப் பெண் எங்களை நவராத்திரி விழாவுக்கு அழைக்க வந்தாள்.

நாங்கள் எல்லோரும் ரொம்பவும் உற்சாகத்துடன் போனோம். அதிலும் என் உற்சாகத்தைப் பற்றிச் சொல்லி முடியாது. அங்கே கொலு வைத்திருந்த அழகான வர்ணம் தீட்டிய பொம்மைகளைப் பார்த்ததும் எனக்கு ஒரே வியப்பாக இருந்தது.

"இத்தகைய பண்டிகை நம் நாட்டில் இல்லையே!" என்று ஏங்கினேன்.

அந்தப் பொம்மைக் கூட்டத்தில் என் மனசை ரொம்பவும் கவர்ந்தது ஒரு மண் பொம்மைதான். படமெடுத்த பாம்பின் தலையின்மேல், பால் வடியும் மனமோகன முகம் படைத்த பாலகன் ஒற்றைக் காலைத் தூக்கி, ஒற்றைக் கையில் பாம்பின் வாலைப் பிடித்துக்கொண்டு நடம் புரிந்த பொம்மைதான் அது.



"அந்தப் பொம்மை ரொம்ப அழகாக இருக்கிறது!" என்று அந்த வீட்டுக்காரரிடம் சொன்னேன்.

வக்கீல், "ஆமாம், அது ரொம்ப அழகான பொம்மைதான்!" என்றார்.

"அதன் அழகு என்னை இம்மட்டோடு நிறுத்தவில்லை. உங்களிடமிருந்து அதைப் பறித்துக்கொண்டு ஓடிப் போகத் தூண்டுகிறது!" என்றேன் சிரித்துக் கொண்டே.

"அதற்கென்ன, வேண்டுமானால் வைத்துக் கொள்ளுங்களேன்!" என்று சொல்லிக் கொண்டே அதை எடுத்து என்னிடம் கொடுத்தார்.

"சும்மா அதை என்னிடம் கொடுத்துப் பிரயோசனமில்லை: அந்தப் பொம்மை என்ன கதையை விளக்குகிறது என்றும் சொல்ல வேண்டும்" என்றேன்.

அவர், ஒரு வெள்ளைக்காரி நம் விஷயங்களில் இவ்வளவு குதூகலமும் உற்சாகமும் காட்டுகிறாளே என்ற ஆர்வத்துடன் அந்தக் கதையைச் சொன்னார்.

"உலகத்துக்குப் பால் வார்க்கும் யமுனையில் இப்படி விஷத்தைக் கக்கும் பாம்பு வெகுநாள் இருந்தது. இந்தப் பால் மணம் மாறாத குழந்தையான கண்ணன் அதன் கொட்டத்தை விளையாட்டாகச் சென்று அடக்கிவிட்டான்" என்றார்.

அன்றிரவு அந்தக் கதையும் பொம்மையுமாகச் சேர்ந்து என் உள்ளத்தில் என்ன வெல்லாமோ எண்ணங்களைக் கிளப்பி விட்டு என்னைத் தூங்கவிடாமல் செய்துவிட்டன.

ஆனால் மறுநாளே இப்படிப்பட்ட ஆச்சரியகரமான விஷயம் நடக்கும் என்று நான் கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை. வெகுநாளாக எனக்குக் கடிதமே எழுதாதிருந்த என் கணவர் எப்படியோ என் விலாசத்தைக் கண்டுபிடித்து எனக்கு ஒரு கடிதம் எழுதினார். அதன் தொனியே வேறாக இருந்தது.

"கண்மணி மார்க்கரட்டுக்கு, பல தடவை நீ எனக்குக் கடிதம் எழுதியும் நான் மட்டும் உனக்குக் கடிதம் எழுதாமலே இருந்து விட்டேன்.

"கடைசிவரை அப்படியே இருந்துவிட என்னால் இயலவில்லை. உன்னைப் பிரிந்த நான் ஏதோ இழந்துவிட்டது போல் வருந்தப் படுகிறேன். என் கொள்கைகள் உனக்கு உகந்தவையாக இல்லாவிட்டால் என்ன? நாம் இல்லற வாழ்க்கையில் அன்னியோன்யமாக இருக்கக் கூடாதா? அப்படித்தான் நான் என்ன சொல்லிவிட்டேன்? உலகில் துன்பமும் பிணியும் பொருமையும் ஏமாற்றமும் அதிகமாக இருக்கிறது. இதிலிருந்து விடுதலை கிடைக்காதா என்றுதானே நான் ஏங்குகிறேன்?" என்று அவர் தம் கடிதத்தில் எழுதியிருந்தார்.

அந்தக் கடிதம் என் மனசை ரொம்பவும் பாதித்துவிட்டது. உடனே அவருக்குப் பதில் கடிதம் எழுதினேன்.

"தங்கள் விருப்பப்படி வெகு சீக்கிரத்திலேயே திரும்பி வருகிறேன். என்னைப் பற்றி இவ்வளவு தூரம் எழுதியிருக்கிறீர்களே, அதுவே என் பாக்கியம்" என்று எழுதிவிட்டு என் சுற்றுப் பிரயாணத்தைச் சீக்கிரம் முடித்துக் கொள்ள முற்பட்டேன்.

தென்னாட்டில் உங்கள் அற்புதமான நடராஜ உருவங்களும் விக்னேசுவர உருவங்களும் மற்றும் பல கலைச் சிற்பங்களும், அவை ஒவ்வொன்றும் எடுத்துக் கூறும் விஷயங்களும் என்னைப் பிரமிக்க வைத்தன.

இதில் ஈடுபட்ட நான் என் திட்டப்படி, அந்த வருஷத்துக் கிறிஸ்துமஸ் பண்டிகைக்கு என் கணவரிடம் போய்ச் சேர முடியாது என்பதை யுணர்ந்தேன். ஆகவே அந்த வருஷத்துக் கிறிஸ்துமஸ் பரிசாக என் இதயத்தைக் கவர்ந்த அந்தக் காளிங்க நர்த்தனப் பொம்மையை வாங்கி, 'என் அன்புக் காணிக்கையாக' அவருக்கு அனுப்பி வைத்தேன்.

அடுத்த நாள் எங்கள் முறைப்படி ஒரு கிறிஸ்துமஸ் கார்டும், ஒரு நீண்ட கடிதமும் எழுதி அவருக்கு அனுப்பினேன்.

கிறிஸ்துமஸ் எல்லாம் கழிந்தது. அவரிடமிருந்து எனக்குக் கடிதம் வரவேயில்லை. பரிசு வந்து சேர்ந்தது என்று சம்பிரதாயமாக எழுதவேண்டிய கடிதம் கூட வராதது எனக்கு மிகவும் கவலையளித்தது.

அவர் உடம்புக்கு ஏதாகிலும் அசௌகரியம் நேர்ந்து விட்டதோ என்று எண்ணி உடனே உங்கள் நாட்டை விட்டுப் புறப்படத் தயாரானேன்.

கப்பல் ஏறி ஒரு மாதத்தில் இந்த நாட்டுக்கு வந்தேன். ரொம்ப ஆவலுடன் என் கணவரைச் சந்திக்கப் போனேன்.

ஆரம்ப காலத்தில் என்னை அன்புடன் வரவேற்பாரே அப்படி என்னை அவர் வரவேற்கவில்லை. இடைக் காலத்தில் என்னை வெறுப்புடன் பார்ப்பாரே அப்படியும் பார்க்கவில்லை. அன்பும் வெறுப்புங் கொண்ட வரவேற்பு எனக்குக் கிடைத்தது. இதன் காரணம் எனக்குப் புரியவில்லை.

வெகு நேரம் வரை ஏதேதோ பேசிக் கொண்டிருந்தோம்.

"என்னுடைய கிறிஸ்துமஸ் பரிசு வந்ததா?" என்று என் ஆவலை அடக்க முடியாமல் கேட்டு விட்டேன்.

"வந்தது" என்று சொன்னார்.

எனக்கு உடனே ஒரு முறை அதைப் பார்க்க வேண்டும் போலிருந்தது. "எங்கே, அதைக் கொஞ்சம் எடுங்கள்" என்றேன்.

'உன் கடிதம் ஒரு நாள் தாமதித்துத் தான் வந்தது!" என்றார் அவர்.

"ஆமாம், ஒரு நாள் தாமதித்துத் தான் வந்திருக்கும்......"

"'உலகத்துக்குத் தாய் போன்று அமுதமளிக்கும் யமுனையில் கொடிய விஷத்தைக் கக்கும் பாம்பு ஒன்று இருந்தது. நல்லவர்களிடையே தீயவர்களும் இருப்பது இன்றும் நாம் உலகத்தில் பார்க்கும் காட்சி. ரோஜாச் செடியில் முள் இருப்பது இயற்கை; இதற்கு வருத்தப்பட்டுப் பயனில்லை. இரவும் பகலும் இன்பமும் துன்பமும் அவனுடைய, சிருஷ்டி விநோதங்கள். ஆகவே, அந்தச் சிருஷ்டியில் ஒரு துகளாகிய நாம், 'ஏன் இப்படிச் செய்தாய், அப்படிச் செய்தாய்?' என்று அவனைக் கேட்க என்ன உரிமை? ஆகவே, அவன் அளிக்கும் துன்பத்தையும் அனுபவிக்க வேண்டியது தான்; இன்பத்தையும் அனுபவிக்க வேண்டியதுதான். கயிறு, பாம்பு என்று வித்தியாசம் அறியாமலிருக்கும் குழந்தையைப் போல் நாமும் இன்ப துன்பத்துக்கு வித்தியாசம் பாராட்டவில்லை என்றால் துன்பம் நம் மனசைப் பாதிப்பதில்லை. இந்த உண்மையை அந்தக் காளிங்க நர்த்தனப் பொம்மை எவ்வளவு அழகாக எடுத்துக் கூறுகிறது! இதைப் பார்க்கும்போது பண்டைய பாரத நாட்டு மகான்களின் எண்ணங்களும் கலைச் சிருஷ்டிகளும் நம்மைத் திகைக்க வைக்கின்றன!' என்று நீ அந்தக் கடிதத்தில் எழுதியிருந்தாய்.........!"

இதை அவர் சொல்லச் சொல்ல என் கண்களில் ஆனந்த பாஷ்பம் துளித்தது. அந்தக் கலைச் சின்னத்தை இன்னொரு முறை பார்க்க வேண்டும் என்ற ஆசை கட்டுக் கடங்காமல் போய் விட்டது. "அதை எங்கே வைத்திருக்கிறீர்கள்? சீக்கிரம் சொல்லுங்கள்!" என்றேன் படபடப்புடன்.

அவர் குரல் கம்மியது. "மார்க்கரட்! என்னை மன்னிப்பாயா?" என்றார்.

எனக்குத் திடுக்கிட்டது. "இது என்ன? ஏன் என்னை இப்படிக் கேட்கிறீர்கள்?" என்றேன்.

"உன் கடிதம் ஒரு நாள் தாமதித்து வந்ததனால்தான்!" என்றார் அவர்.

"என்ன நேர்ந்தது?" என்றேன் ஆத்திரத்துடன்.

"முதல் நாள் அந்தப் பொம்மையில் இருந்த பாம்பையும் நிர்வாணக் குழந்தையையும் பார்த்ததும் எனக்கு ரொம்பவும் அருவருப்பாக இருந்தது. உன்மேல் ஆத்திரம் பொங்கி வந்தது. கோபத்தில் அந்தப் பொம்மையைத் தரையில் விட்டெறிந்தேன். அது பல துண்டங்களாகச் சிதறிப் போயிற்று. அடுத்த நாள் உன்னுடைய அற்புதமான கடிதம் வந்தது. என் மனது எப்படி வெல்லாமோ வேதனைப்பட்டது. எப்படிப் பட்ட பாவம் செய்துவிட்டோம் என்று வருத்தப்பட்டேன். பிறகு அந்த உடைந்த துண்டங்களை யெல்லாம் திரட்டி இந்தப் பெட்டியில் போட்டு வைத்தேன்!" என்றார்.

அப்போது எனக்கிருந்த உணர்ச்சியைப் பற்றித் தங்களிடம் சொல்லவேண்டிய அவசியமில்லை என்று எண்ணுகிறேன்.

"அந்தப் பெட்டிதான் இது; அதே பொம்மைதான் இது; அவர் எழுதி வைத்த வாசகங்கள்தான் 'இவை!" என்றுசொல்லி, ஸ்ரீமதி மார்க்கரட் உடைந்த பகுதிகளை யெல்லாம் ஒன்று சேர்த்து வைத்தாள். அடுத்த நிமிஷம் அழகிய காளிங்க நர்த்தன உருவம் தோன்றியது. அதற்கு மூன்று முறை வலம் வந்து நமஸ்காரம் செய்து விட்டு வெளியே வந்தேன்.

மிஸ்டர் வில்லியம்ஸ் தம்முடைய வாசகத்தில் அந்த 'மண்' என்ற வார்த்தையை எவ்வளவு உணர்ச்சியுடன் உபயோகித்திருக்க வேண்டும்! இங்கிலாந்தில் உள்ளதும் மண்தான்; இந்தியாவில் உள்ளதும் மண்தான். ஆனால் இரண்டு மண்ணும் எப்படி ஒன்றாக முடியும் என்று எண்ணி வியந்தேன்.



மன்னிப்பே கிடையாது

எம். ஆர். ராஜகோபாலன்

டிக்கெட் கலெக்டர் விட்டல் ராவை ஒரு தனிப் பிரகிருதி ரகத்தில் சேர்த்திருந்தான் ரகுராமன். மாம்பலத்திலிருந்து பீச்சிலிருக்கும் ஆபீஸிற்கு அவனும் சென்ற இரண்டு வருடங்களாக 'எலெக்ட்ரிக் ட்ரெயி'னில் போய்க் கொண்டிருக்கிறான். அழகான சூட்டு, கோட்டுடன் இரண்டாம் வகுப்புப் 'பாஸில்' போகும் அவனை யாரும் இதுவரை "நில், பாஸை எடு!" என்று கேட்டதில்லை. அவனுடைய பார்வையும் நடையுமே அவன் ஒரு 'பாஸ் ஹோல்டர்' என்பதைக் காட்டிவிடும்.

ஆனால் கொஞ்ச நாளைக்கு முன்பு அந்த ஸ்டேஷனில் முளைத்த விட்டல்ராவ் வேண்டுமென்றே ரகுராமனின் பொறுமையைச் சோதித்து வந்தான். ஒரு நாளாவது அவன் ரகுவின் பாஸைப் பார்க்காமல் போக விடுவதில்லை. பார்க்கப் போனால் மற்றவர்களின் பாஸைப் பற்றிக்கூட அவன் அவ்வளவு கவலைப்பட்டதாகத் தோன்றவில்லை. ஆனால், ரகு பக்கத்தில் வந்ததும் அலாதி பிரியத்துடன், "ஸார்! தயவு செய்து மன்னிக்கணும். உங்கள் பாஸைப் பார்க்கணும்!" என்பான். ரகுவிற்கு ஆத்திரம் ஆத்திரமாய் வரும். பாவம், எத்தனை நாளைக்குத்தான் ஒரு மனுஷன் அந்த 'தயவு செய்து மன்னிக்கணும்' என்ற வார்த்தையைக் கேட்டுப் பொறுத்துக் கொண்டிருப்பான்?

"தயவு செய்து மன்னிக்கணுமா? என்னைப் பொறுத்த வரையில் உனக்கு மன்னிப்பே கிடையாது!" என்று தனக்குள் உறுமிக் கொண்டே பாஸை எடுத்து அவன் முகத்துக்கு நேரே நீட்டி விட்டுப் போவான் ரகு.

* * *

அன்று தான் வழக்கமாகப் போகும் வண்டியைத் தவற விட்டுவிட்டான் ரகு. ஆபீஸிற்கோ நாழியாகிவிட்டது. எப்படியாவது இந்தத் 'தயவு செய்து மன்னி'ப்பதிலிருந்து தப்பி ஆபீஸிற்குச் சீக்கிரமாகப் போய் விடவேண்டும் என்று முடிவு செய்து கொண்டான். ஆகவே வண்டியை விட்டு இறங்கியதும் விட்டல் ராவை அரைக் கண்ணால் கவனித்துக் கொண்டே 'விடு விடு' என்று நடந்தான். ஆனால் விட்டல் ராவ் விட்டால்தானே! தனது வழக்கமான அணுகுண்டை எடுத்து அலக்ஷியமாக அவன்மேல் பிரயோகித்து விட்டான்!

"இது ஏதடா சனியன்!" என்று எண்ணிக்கொண்டே பர்ஸிலிருந்த 'பாஸை' எடுப்பதற்குப் பையில் கையை விட்டான் ரகு. ஒரு நிமிஷமாயிற்று; இரண்டு நிமிஷமாயிற்று; பர்ஸே கையில் அகப்படவில்லை. அது அங்கே இருந்தால்தானே அகப்படுவதற்கு? அத்தனை பேருக்கு நடுவில் ரகுவிற்கு அவமானம் தாங்கவில்லை. ஆபீசுக்குப் புறப்படும் அவசரத்தில் ரகு தன் பழைய கோட்டிலிருந்த பர்ஸைப் புதிய கோட்டிற்கு மாற்ற மறந்து விட்டான். ஆகவே, அவன் கோபமெல்லாம் தொண்டைக்குக் கீழே போய் விட்டது!

"ஸார்! பேரை எழுதிக் கொள்ளுங்கள். ஆபீசிற்கு நாழியாகி விட்டது. பாஸை நாளைக்குக் கொண்டுவந்து காட்டுகிறேன்!" என்றான் பரிதாபமாக.

"இந்த மாதிரிச் சந்தர்ப்பம் எப்போது வாய்க்கும்!" என்று காத்துக் கொண்டிருந்தவன் போல், "சரி, தயவு செய்து உங்கள் விலாசம்?" என்று கையில் ஒரு சிறு 'நோட்'டையும் பென்ஸிலையும் எடுத்து வைத்துக்கொண்டு கேட்டான் விட்டல் ராவ்.

"ரகுராமன் பீ. ஏ., கோமில்லா அண்டு கம்பெனி" என்றான் ரகு.

விட்டல் ராவ் அதை எழுதிக் கொண்டே, "வீட்டு விலாசம்?" என்றான்.

"28, ராமன் தெரு. தி. நகர்."

"தகப்பனார் பெயர்?"

"அது எதற்கு?" என்றான் ரகு, தனக்கு வந்த ஆத்திரத்தை அடக்கிக் கொண்டு.

"தயவு செய்து சொல்லுங்கோ, ஸார்! எந்த விஷயத்திலும் தகப்பனார்தானே முக்கியம்?" என்றான் விட்டல் ராவ்.

"வேதாசலமய்யர்" என்று வேண்டா வெறுப்போடு சொல்லி விட்டு, "நாழியாகிறது, நான் போகலாமா?" என்றான் ரகு.

"பேஷாய்ப் போகலாம். ஆனால் தயவு செய்து நாளைக்கும் பாஸை மறந்துட்டு வந்துடாதேங்கோ!" என்றான் டிக்கெட் கலெக்டர் விட்டல் ராவ்.

மேலே சொன்ன சம்பவம் நடந்து ஆறு மாதத்திற்கு மேல் ஆகி விட்டது. ரகுவிற்கு ஸ்வர்ண விக்கிரகம் போன்ற தஞ்சாவூர் ஸ்டேஷன் மாஸ்டர் பெண் கமலா மனைவியாக வாய்த்தாள். "கலியாணமே செய்துகொள்ள மாட்டேன்!" என்று பிடிவாதம் பிடித்துக் கொண்டிருந்த ரகுவைத் தன் அழகினால் அடிமை கொண்டு விட்டாள் கமலா.

ஆடிப் பண்டிகை கொண்டாட ரகுவை வரும்படி அவனுடைய மாமனாரிடமிருந்து அழைப்பு வந்திருந்தது. நான்கு நாள் லீவு போட்டுவிட்டு ரகு வெகு உற்சாகத்தோடு தஞ்சாவூர் போய்ச் சேர்ந்தான். கமலாவுடன் பொழுதைக் கழித்து வந்த ரகுவுக்கு அந்த நாலு நாள் லீவும் அத்தனை சீக்கிரத்தில் எப்படிப் போனதென்றே தெரியவில்லை.

கடைசியாக, அன்று ஊருக்குத் திரும்பு முன் கமலாவுடன் தனிமையில் பேசிக் கொண்டிருந்தான் ரகு. அப்பொழுது அவளுடைய தம்பி சமய சந்தர்ப்பம் தெரியாமல் அங்கே வந்து, "அக்கா! அந்த மாமாதான் உனக்குத் தெரியுமே, அவர் வந்திருக்கிறார். உன்னையும் அத்திம்பேரையும் பார்க்கணுமாம். கீழே அப்பாவோடே பேசிக்கொண்டிருக்கிறார்!" என்றான்.

கமலம் போவதற்கு எழுந்தாள். ரகு அவளுடைய கையைப் பிடித்து இழுத்து உட்கார வைத்து, "கமலம்! அது யார் உனக்குத் தெரிந்த மாமா?" என்று கேட்டான்.


"அவரா! நமக்கு ரொம்ப வேண்டியவர். அவர் இல்லாவிட்டால் நம் இருவருக்கும் கலியாணமே நடந்திருக்காது. மூன்று வருஷமாக அப்பா எனக்கு வரன் கிடைக்காமல் திண்டாடினார். போன வருஷம் பட்டணத்தில் இருந்த அவருக்கு, ஒரு வரன் பார்த்துச் சொல்லும்படியாக எழுதியிருந்தார். அந்த மாமா உங்களை அடிக்கடி பார்ப்பாராம். நீங்கள் அவர் மனதிற்கு ரொம்பப் பிடித்திருந்தீர்களாம். ஆனால் உங்களைப் பற்றிய தகவல் கிடைப்பதற்கு ரொம்பவும் கஷ்டப்பட்டாராம். கடைசியில் ஏதோ தந்திரம் செய்து உங்களிடமிருந்தே ஊர், பெயர், உங்கள் அப்பா முதலிய விவரங்களையெல்லாம் தெரிந்து கொண்டு என் அப்பாவுக்குக் கடிதம் எழுதினார். பிறகுதான் நம் கலியாணம் நிச்சயமாச்சு!" என்றாள் கமலம்.

அவ்வளவுதான்; ரகு திடீரென்று எதையோ நினைத்துக் கொண்டவன்போல் துள்ளிக் குதித்து எழுந்து, "கமலம்! அவரை நான் கட்டாயம் பார்க்க வேண்டும்!" என்றான்.

இருவரும் எழுந்து ஹாலுக்கு வந்தார்கள். அங்கே கண்ட காட்சி ரகுவைத் தூக்கிவாரிப் போட்டது.


ஆமாம், ரகுவைத் தினசரி நாலு பேருக்கு முன்னால் அவமானப்படுத்திக் கொண்டிருந்த அதே டிக்கட் கலெக்டர் சாகஷாத் விட்டல் ராவ்தான் அவன் மாமனாரோடு உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தான்!

★ ★ ★ ★ கடைசி மாப்பிள்ளை! ★ ★ ★ ★




"13-ம் நம்பர் வீடு எந்தப் பக்கம் ஸார்?"
"இந்தப் பக்கம்தான்; நீங்கள் யாரோ?"
"நான்தான் சுந்தரமய்யர் மாப்பிள்ளை!"

"ஸார்! 13-ம் நம்பர் வீடு......"
"இந்தப் பக்கம்தான்; தாங்கள் யாரோ?"
"ராமசாமி ஐயர் மாப்பிள்ளைன்னு நான்!"



"என்ன, 13-ம் நம்பர் வீடுதானே? உங்களை எனக்குத் தெரியவில்லையே?"
"டாக்டர் சேஷகிரி ராவின் மாப்பிள்ளை நான்!"

"ஸார்! 13-ம் நம்பர் வீடு......"
"எங்கே என்றுதானே கேட்கிறீர்? இந்தப் பக்கம்தான்; நீங்கள் யாரோ?"
"ராகவாச்சாரியார் மாப்பிள்ளை!"



"என்ன, 13-ம் நம்பர் வீடா? நீங்கள் யார், ஸார்?"

"குருமூர்த்தி ஐயர் மாப்பிள்ளை!"

"போங்கோ ஸார், போங்கோ! இந்தப் பக்கம்தான், போங்கோ!"

"வாருங்கோ! 13-ம் நம்பர் வீடுதானே! நீங்கள் ரகுராமய்யர் மாப்பிள்ளையல்லவா?"
"உங்களுக்கு என்னை எப்படித் தெரியும்?"
"அந்த வீட்டில் மற்றக் குடித்தனக்காரரின் மாப்பிள்ளைகளெல்லாம் வந்து சேர்ந்து விட்டார்கள்! அதனால் தெரிந்தது!"

படித்துப் பார்!

Madras Information

[Fortnightly Journal published by the Director of Information & Publicity, Fort St., George, Madras.]

சென்னை சர்க்கார் தங்களுடைய காரியங்களைப் பற்றிப் பொதுஜனங்களுக்குத் தெரியப்படுத்த ஒரு பத்திரிகை போடப் போகிறர்கள் என்று முதலில் அறிவிக்கப்பட்டபோது நாம் அவ்வளவு உற்சாகப் படவில்லை. பத்திரிகை உபயோகமற்றதாயும், சர்க்காரின் சாதாரண காரியங்களைப் பிரமாதமாகப் பறையடிப்பதாயும் இருக்குமென்று எண்ணினேம்.

ஆனல் சென்ற வாரத்தில் வெளியான மேற்படி சர்க்கார் பத்திரிகையின் முதல் இதழ், அப்படிப்பட்ட பயத்துக்கு ஆதாரமில்லையென்று தெரியப்படுத்துகிறது.

பத்திரிகையின் மேலட்டை, கண்ணையும் கருத்தையும் கவரும் முறையில் அழகாக அமைந்திருக்கிறது.

உட் பக்கங்களில், மதுவிலக்கின் அவசியத்தைப் பற்றிய மிகச் சிறந்த கட்டுரைகள் சில காணப்படுகின்றன. இதைத் தவிர உணவுப் பிரச்னை, கதர்த் திட்டம், குடிசைத் தொழில் அபிவிருத்தி ஆகிய உபயோகமான விஷயங்களைக் குறித்து நல்ல நல்ல கட்டுரைகள் இருக்கின்றன.

சென்னை மந்திரிகளின் படங்களும் இந்திய தேசிய சர்க்கார் மந்திரிகளின் படங்களும் பத்திரிகையைச் சிறப்பிக்கின்றன.

மதுவிலக்கு சம்பந்தமான படங்களும் நன்று யிருக்கின்றன. வரும் இதழ்களில் மதுவிலக்குப் பிரசார நோக்கத்துடன் சில கார்ட்டூன்களும் சேர்க்கப்பட்டால் மிகவும் உபயோகமா யிருக்கும்.

சென்னை சர்க்காரின் விளம்பர இலாகாத் தலைவர் ஸ்ரீ வி. வி. ஹனுமந்தராவ் பத்திரிகைத் தொழிலில் அநுபவமும் திறமையும் உள்ளவர் என்பது இந்த முதல் இதழிலிருந்து நன்கு வெளியாகிறது. இந்தக் காகிதக் கிராக்கி காலத்தில் கடைசி அட்டைப் பக்கம் காலியா யிருப்பதைப் பார்க்கும்போது மட்டும் கொஞ்சம் 'கரி' என்கிறது.

சர்க்கார் நடத்தும் பத்திரிகைக்கு வர்த்தக விளம்பரங்கள் கோரும் முறை யுக்தமில்லை என்று கருதுகிறேம்.

தினசரிப் பத்திரிகைகளில் வெளியான செய்திகளை, — மந்திரிகளின் பிரசங்கங்கள் முதலியவற்றை, — அப்படியே திருப்பிப் போட வேண்டிய அவசியமில்லை.

மொத்தத்தில் நன்றாக அமைந்திருக்கும் இந்த சர்க்கார் பத்திரிகைக்கு வரவேற்பு அளிப்பதுடன் வரும் இதழ்கள் உருவத்திலும் உபயோகத்திலும் இதைக் காட்டிலும் சிறந்து விளங்கும் என்று எதிர்பார்க்கிறேம்.

People's health

[ஆசிரியர்: ஏ. வி. ராமன், விலாசம்: லாயிட் கார்னர், ராயப்பேட்டை, சென்னை; விலை: ரூ. 1.]

கொஞ்ச காலத்துக்கு முன்னல் சென்னை நகரத்துக் குப்பைத் தொட்டிகளும் தெருக்களும் சாக்கடைகளும் நகரசபை அதிகாரிகளும்கூட ஒரு தனி மனிதரைப் பார்த்துப் பயப்பட்டுக் கதிகலங்கிக் கொண்டிருந்தார்கள். அப்படிப்பட்ட அதிசயமான சக்தி வாய்ந்த மனிதர் ஸ்ரீமான் ஏ. வி. ராமன் அவர்கள்தான்! ஸ்ரீ ராமன் கொஞ்சங்கூட தயவு தாட்சண்யமில்லாமல் சென்னை நகரசபை சுகாதார முறைகளைப் பற்றிப் பச்சையாகவும் பகிரங்கமாகவும் விருவிருப்பாகவும் பத்திரிகைகளில் எழுதிவந்தார். அவர் எழுதி வந்த மேற்படி ரசமான கட்டுரைகளைப் படிக்கும்போதெல்லாம் நமக்கு ஓர் ஆவலும் பரிதாபமும் தோன்றுவதுண்டு. பொதுஜன சுகாதாரத்தில் இவ்வளவு அக்கறையும் ஆர்வமும் கொண்ட மனிதரின் கையில் ஒரு பத்திரிகை மாத்திரம் இருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும் என்பதே மேற்படி ஆவலாகும். மேற்படி ஆவலை ஸ்ரீமான் ராமன் இப்போது பூர்த்தி செய்திருக்கிறர். 'People's health' என்ற பெயரில் ஒரு பத்திரிகையையே ஆரம்பித்திருக்கிறர். நேர்த்தியான காகிதத்தில், அழகான அச்சில், முத்து முத்தான எழுத்தில் பொதுஜன சுகாதாரம் சம்பந்தமான பல்வேறு விஷயங்கள் இதில் வெளியாகியிருக்கின்றன. நம்முடைய மாஜி சுகாதார மந்திரி டாக்டர் ராஜன், ஸர் என். கோபாலஸ்வாமி ஐயங்கார் போன்ற அறிஞர்கள் முதல் இதழில் விஷயதானம் செய்திருக்கிறர்கள். ஸ்ரீ ஏ. வி. ராமன் முதல் இதழிலேயே சென்னை நகர சபைத் தண்ணீர் சப்ளையைப் பற்றியும் புகழ்பெற்ற கூவம் நதியைப் பற்றியும் காரசாரமாக எழுதியிருக்கிறர். பொதுஜன சுகாதாரத்தைப் போற்றி வளர்ப்பதற்காக வெளியாகி யிருக்கும் இந்தப் பத்திரிகைக்குப் பொது ஜனங்கள் பூரண ஆதரவு அளிப்பார்களென்று நம்புகிறேம்.



டி.கே.சி

கம்பர் தரும் காட்சி

157. ஆசைக்கு ஏது அவமானம்?

★ ★ ★

ராவணனிடம் சீதையின் அழகைப் பற்றிச் சூர்ப்பனகை எப்படி எல்லாமோ வியந்து பேசுகிறாள்: "அடடா! மேனி தான் எப்படியிருக்கிறது! நெற்றியோ கண்ணோ, பல்லோ வர்ணிக்க முடியாது. தோளின் அழகைச் சொல்லவா? கண் வீச்சின் அழகைச் சொல்லவா? எனக்கு ஒன்றும் ஓடவில்லை. நீதான் நாளைக்கு நேரில் பார்த்துக் கொள்ளுவாயே!" என்று ஏதோ பேச்சை முடித்ததுபோல் பேச்சை நிறுத்தினாள்.

சிறிது நேரம் மௌனம்.

உள்ளத்திலுள்ள வியப்பின் வேகம் மறுபடியும் மேலிடுகிறது. ஆரம்பிக்கிறாள்: ராவணனும் கேட்டுக் கொண்டிருக்கிறான்.

"பார்வதி தேவியை ஒருவன் பாகத்தில் வைத்தான்; செந்தாமரையில் இருக்கும் லக்ஷ்மியை ஒருவன் மார்பில் வைத்துக் கொண்டான். அப்படியே சரஸ்வதியை நாவில் வைத்துக் கொண்டான் பிரம்மன். இதெல்லாம் உனக்குத் தெரியும்."

'பாகத்தில் ஒருவன்வைத் தான்;
  பங்கயத்(து) இருந்த பொன்னை
ஆகத்தில் ஒருவன்வைத் தான்;
  அந்தணன் நாவில்வைத் தான்;
மேகத்தில்மி ளிரும்மின் னை
  வென்றநுண் இடையைநீ யும்,
வாகைத்தோள் வீரபெற் றால்
  எங்ஙனம் வைத்துவாழ் தி?'

[பாகத்தில் ஒருவன் வைத்தான்: பார்வதி தேவியைப் பாகத்தில் வைத்தான் சிவபெருமான்; பங்கயத்து இருந்த பொன்னை: செந்தாமரையிலிருந்த லக்ஷ்மியை; ஆகத்தில் ஒருவன் வைத்தான்: மார்பிலே வைத்துக்கொண்டான் திருமால்; அந்தணன் நாவில் வைத்தான்: சரஸ்வதியை நாவில் வைத்துக்கொண்டான் பிரமன்; மேகத்தில் மிளிரும் மின்னை வென்ற நுண் இடையை: மேகத்திலிருந்து ஒளிவிடும் மின்னலை வென்ற நுண்ணிடையுடையாளாகிய சீதையை; வாகைத்தோள் வீர: தோளில் வாகை மாலை சூடிய வீரனே; பெற்றால்: நாளைப் பெறப் போகிறாய் — அப்படிப் பெற்றபோது; எங்ஙனம் வைத்து வாழ்தி: என்ன ஸ்தானம் அவளுக்குக் கொடுத்து வாழப் போகிறாயோ, தெரியவில்லை!]

மேலும் சொல்லுகிறாள்: "அவளுடைய மழலைச் சொல்லைக் கேட்டு அப்படியே மயங்கிப் போய்விடுவாய்! ஏராளமான செல்வத்தை யெல்லாம் அவளுக்குக் கொடுத்து விடுவாய்!"

'பிள்ளைபோல் பேச்சினா ளைப்
  பெற்றபின் பிழைக்கலாற் றாய்;
கொள்ளைபோ கின்றசெல் வம்
  அவளுக்கே கொடுத்திடு வாய்;
வள்ளலே! உனக்குநல் லேன்;
  மற்றுநின் மனையில்வா ழும்
கிள்ளைபோல் மொழியார்க்கெல் லாம்
  கேடுசூழ் கின்றேன்அன் றே!'

[கிள்ளைபோல் மொழியார்க்கு எல்லாம்: சூர்ப்பனகை ராவணனது மனைவியரோடு அன்பாகப் பழகி வந்த அருமைப்பாடு 'கிள்ளைபோல் மொழியார்' என்ற சொல்லில் நன்றாய்த் தொனிக்கிறது.]

⁂

கடைசியாகச் சீதையின் அழகை இன்னதென்றே சொல்ல முடியாதபடி ஒரே அதிசயத்தில் நின்றவளாய்ச் சூர்ப்பனகை பேசுகிறாள்.

"சீதையைத் தேவலோகத்திலுள்ள பெண்களோ, பூலோகத்திலுள்ள பெண்கள்தானோ ஏதோ பத்து மாசம் வயிற்றில் வைத்துப் பெற்றவள் என்றெல்லாம் சொல்ல முடியாது. தேவர்கள் எல்லாம் சேர்ந்து கடைந்த காரணத்தினால் லக்ஷ்மி தேவியைத் தந்தது சமுத்திரம். அந்தச் சமுத்திரத்தை வெல்ல

வேண்டாமா? அதற்காக நிலமானது சீதையைத் தந்தது; யாருக்குமில்லாத புகழைப் படைத்துக் கொண்டாள் நில மகள்!''

'தேர்தந்த மடியின்சீ தை,
தேவர்தம் உலகோ(டு)இம் பர்

வார்தந்த கொங்கையார் தம்
வயிறுதந் தாளேஅல் லன்;

தார்தந்த கமலத்தா ளை,
தருக்கினர் கடையச்சங் க

நீர்தந்த(து); அதனைவெல் வான்,'
நிலம்தந்து நிரம்பிற்(று)அன் றே.'

[தேவர்தம் உலகோடு இம்பர்: தேவ லோகத்திலும் இந்த உலகத்திலும்; தார்தந்த கமலத்தாளை: வரிசையான இதழ் கொண்ட செந்தாமரையிலுள்ள லக்ஷ்மியை; தருக்கினர் கடைய: மிக்க எக்களிப்போடு தேவர்கள் கடைய; சங்கநீர் தந்தது: ஆறுகள் எல்லாம் சங்கமமாகிற சமுத்திரம் தந்தது: அதனை வெல்வான்: அந்தச் சமுத்திரத்தை வெல்லும் பொருட்டு: நிலம் தந்து: பூமாதேவி தந்து: நிரம்பிற்று அன்றே: புகழால் சிறந்து விட்டது.]

குறிப்பு:—அழகு, குணம் இவைகளின் பெருமிதத்தை அபூர்வமான இசைப் பண்போடு சொல்லி முடிக்கிறாள் சூர்ப்பனகை. செல்வத்தின் சிறப்பு (லக்ஷ்மி) சாமான்யம் என்றும், பூமாதேவியின் சிறப்பு என்ன முடியாத அளவு உயர்ந்தது என்றும் அழுத்தம் கொடுத்து வருகிற பாவம் அதி அற்புதமாக இருக்கிறது. செய்யுளின் ஓசையும் தாளமும் நம் செவிப்புலனை விட்டு எளிதில் அகன்று விடாது. 'கவி உருவம்' என்பது இதுதான்.

***

சீதையைப் பற்றிச் சொல்லியாய் விட்டது. ராவணனுக்கு அவள் உரியவளாகப் போகிறாள் என்றும் சொல்லியாய் விட்டது. இனி என்ன சொல்லப் போகிறாள், பார்ப்போம்.

''சமுத்திரமானது மீனைக் கொண்டு ஊடாடி விளையாடுகிறது. அப்பேர்ப்பட்ட சமுத்திரம் சூழ்ந்த இந்த உலகத்திலுள்ளவர்கள் உன்னைப் பார்த்துப் பாராட்டும்படி சீதையாகிய மானைக் கொண்டு ஊடாடி விளையாடப் போகிறாய்! ஆனால் அது போதுமா? உன் வான் வலியை உலகத்தார் காண வேண்டாமா?''

'மீன்கொண்(டு)ஊ டாடும்வே லை
மேகலை உலகம்ஏத் த,

தேன்கொண்டு டாடும்கூந் தல்
சிற்றிடைச் சீதைஎன் னும்

மான்கொண்டு டாடும்நீ,—உன்
வான்வலி உலகங்கா ண

யான்கொண்டு டாடும்வண் ணம்
இராமனைத் தருதிஎன் பால்.'

[வேலை மேகலை: சமுத்திரமாகிய மேகலை சூழ்ந்த: உலகம் ஏத்த: உலகத்தவர் புகழ; தேன்கொண்டு ஊடாடும் கூந்தல்: புஷ்பம் முடிந்து செறிந்து சுருண்ட கூந்தலுக்குள் வண்டுகள் விளையாடுகின்றனவாம்; சிற்றிடைச் சீதை என்னும் மான்: சிறிய இடையோடு கூடிய சீதை என்னும் மானைக் கொண்டு; ஊடாடும் நீ: உரிமையாகக் கொண்டு காதலில் திளைக்கும் நீ: உன் வான் வலி உலகங்காண: உன்னுடைய அதிசயமான வான் வலியை உலகத்தார் வியக்கும்படி:—நீ உன் போகத்தை மாத்திரம் கொண்டாடினால் போதுமா:—உன் வான் வலியால் ராமனை இழைக்க வேண்டும் அல்லவா? அப்போதுதானே உன் வீரம் உலகத்துக்குத் தெரிய வரும்?]

காதல் வெறியில் சூர்ப்பனகைக்கு என்ன வெல்லாமோ தோற்றுகிறது. ராமனோடு கூடிக் குலாவுவதாக உருவெளித் தோற்றங்கள் நிகழ்கின்றன. இந்தத் தோற்றங்களின் சாயல் செய்யுளின் ஓசை, தாளங்களில் எதிர் ஒலி செய்கின்றன.

பெண்ணுக்குரிய அடக்கம் கட்டுப்பட்டு உள்ளுக்குள் கிடந்தது. கடைசியில் அம்பலத்துக்கு வந்துவிடுகிறது.

'யான்கொண்டு டாடும்வண் ணம்
இராமனைத் தருதிஎன் பால்.'

என்று சொல்லித் தீர்க்கிறாள் சூர்ப்பனகை!

நாகரீக சுந்தரி

“பாலசுப்ரமண்யா, உன் விளையாட்டுன் விசித்திரந்தானென்ன! நீ பக்தர்களை ஆட்கொள்ளும் வழி எவ்வளவு நுணுக்கமானது! கவியின் உள்ளத்தில் மறைந்துகொண்டு கற்பனைத் திரையில் நீ நடிக்கும் காட்சி எவ்வளவு இன்பகரமாயிருக்கிறது! ஓவியக்கோலின் திறத்தினால் நீ வெளிவந்து நிற்கும் விந்தைதானென்னே! சூனியமான என் இதயத்தை உன் பாதத் தாமரையாக மாற்றிய ஜால வித்தையை என்னென்று சொல்லுவேன்! நாகரீக சுந்தரியாக இருந்த என்னை நாளும் உன் நினைவாகவே இருக்கச் செய்து விட்டாய். நான் தன்யளானேன், பாலசுப்ரமண்யா, தீனதயாளுவே, தீனரக்ஷகா, சரணம், சரணம், சரணம்.” இவ்வாறு வாழ்த்தி வணங்கிவிட்டு சுந்தரி பூஜா இருகத்திலிருந்து வெளியில் வந்ததும், தன்னுடைய கலாசாலைத் தோழி சரசா நிற்பதைக் கண்டாள்.

இருவரும் சிறிது நேரம் ஆச்சரியத்தில் மூழ்கி இருந்தனர். பிறகு சரசாவை வரவேற்று உபசரித்து சுந்தரி பேசலானாள்:—‘நீ ஆச்சரியப்படுவது நியாயந்தான். என்னை நீ நாகரீக சுந்தரி என்றுதான் அறிவாய். இப்படி பக்த சுந்தரியாக எப்படி ஆனேனென்று புரியாமல் திகைக்கிறாய். சொல்லுகிறேன், கேள்.


‘காலேஜ் படிப்பு முடிந்ததும் நாம் இருவரும் பிரிந்தோம். நான் மேல்நாட்டு மோகத்தில் மூழ்கி யிருந்ததை நீ அறிவாய். பிறந்த நாட்டை இகழ்ந்திருந்ததையும் நீ மறந்திருக்க மாட்டாய். ஆனால் எதிர்பாராத விதமாய் எனக்கு திடீரென்று கலியாணம் ஆயிற்று. அதனால் நான் குடும்பச் சுழலில் சிக்கிக் கொண்டேன். என் கணவரை நீ பார்த்ததில்லையே, கட்டாயம் பார்க்கவேண்டும்; அவரைக் காட்டிலும் உத்தம மனிதரை நீ காண முடியாது. எனக்கு இரண்டு குழந்தைகள் பிறந்திருக்கின்றன; மூத்தது பிள்ளை, இதோ ஓடி வருகிறானே இவன் தான் இளையவன். இவனை என் உயிராகவே மதிக்க ஆரம்பித்தேன். உடனே என் சோதனை காலம் தொடங்கிற்று; அவன் திடீரென்று இளைக்கலானான். மலர் இதழ்களைப் போன்று இருந்த கைகால்கள் காய்ந்த குச்சிகளைப் போல் நீண்டு விட்டன. வயிறு வீங்கியது. மண்டை பனங்காயானது. இப்படி என் செல்வக் குழந்தை குரூபமடையக் காரணம் அவனுக்குண்டான ஈரல், குலைக்கட்டிகளென்று அறிந்தேன். உடனே ஆங்கில வைத்தியத்தை நாடிச் சென்றேன். ஆனால் பிரயோசனப்படவில்லை. மற்ற முறைகளையும் ஒன்றன்பின் ஒன்றாக அனுசரித்தேன். அனுகூல முண்டாகவில்லை. என்ன செய்வேன், என் குழந்தை நாளுக்கு நாள் இளைத்து வருவதைக் கண்டு புழுவாய்த் துடித்தேன். என் மனம் ஒடிந்தே போயிற்றென்று கூடச் சொல்லலாம். ஆனால் நல்ல வேளையில் கடவுளை நினைக்க ஆரம்பித்தேன். எல்லாக் கோவில்களுக்கும் சென்று வேண்டினேன்; காணிக்கையும் செலுத்தினேன். அவன் அருளால் பளிச்சென்று என் கண்ணில் பட்டது ஒரு விளம்பரம், அதை உறுதிப்படுத்திய சொல்லும் என் காதில் விழுந்தது: **கரூர் ஸ்ரீ சக்தி விலாஸ வைத்தியசாலையில் செய்யப்படும் பண்டிட் P. S. ராம சர்மாவின் சக்தி சஞ்சீவி** என்ற மருந்து ஒன்றே என் குழந்தையைக் காப்பாற்றுமென்று தோன்றியது. உடனே அதை வாங்கிக் கொடுத்து வந்தேன். அதனால்தான் இதோ நிற்கிறான் என் குழந்தை. அந்த மருந்தின் பெட்டிமேல் ஸ்ரீ பாலசுப்ரமண்யக் கடவுளின் படம் வரயப்பட்டிருக்கிறது. அவன்தான் என் குழந்தையைக் காப்பாற்றியவன் என்று அவனை அநுதினமும் பூஜித்து வருகிறேன். இதில் ஆச்சரியம் என்ன இருக்கிறது, சரசா, நீயே சொல்லு.’

‘நல்லது, சுந்தரி, நீ மேல்நாட்டு நாகரீகத்தை விட்டு விட்டாலும், நம் நாட்டு நாகரீகப்படி தெய்வ பக்தி கொண்டிருப்பதால் இன்றும் உன்னை நான் நாகரீக சுந்தரி என்றே எண்ணுகிறேன். ஏற்ற சமயத்தில் நல்ல மருந்தை உபயோகித்து குழந்தையைக் காப்பாற்றி விட்டாய். இந்த சக்தி சஞ்சீவியை முன்னமேயே நான் அறிவேன். ஆனால் அதனால் தெய்வ பக்தியும் உண்டாகுமென்று இப்போது தான் அறிந்தேன்.’



ஸ்ரீ பாலசுப்ரமண்யன் துணை.

ADVT.



பரிசோதனை

ஆசிரியர்: விச்வம்பரநாத் கௌசிக்
மொழிபெயர்ப்பு: ரா. வீழிநாதன்

22

மாலை சுமார் ஆறு மணி இருக்கும். விராஜகிசோர் தன் வேலைக்காரன் ஒருவனை அழைத்துக் கொண்டு பெட்டி, படுக்கை, துப்பாக்கி இவைகளுடன் ஒரு வண்டியில் சந்திரபுரத்துக்குச் சென்று ஜமீன்தார் வீட்டு வாசலில் இறங்கினர். அப்பொழுது ஜமீன்தார் தம் வீட்டுத் திண்ணையில் உட்கார்ந்திருந்தார். விராஜகிசோர் நேரே அவரிடம் சென்று, "நீங்கள் தானே டாகுர் அர்ஜுன்சிங்?" என்று விசாரித்தார்.

"ஆமாம்."

"கான்பூர் ராமநாதபாபுவிடமிருந்து நான் வந்திருக்கிறேன்."

"ஓகோ, அப்படியா? வாருங்கள், வாருங்கள்!" என்று கூறிய வண்ணம் எழுந்து அவரை வரவேற்றார் ஜமீன்தார். பிறகு வேலைக்காரனைக் கூப்பிட்டுச் சாமான்களை எல்லாம் உள்ளே கொண்டு போய் வைத்து விட்டு, நந்தராமைக் கூப்பிட்டுக் கொண்டு வரச் சொன்னர். இருவரும் வாசற்புறத்தில் போடப்பட்டிருந்த நாற்காலியில் அமர்ந்தனர்.

சிறிது நேரத்திற்கெல்லாம் அங்கே வந்த நந்தராம் விராஜகிசோரைப் பார்த்து விட்டு, "ஓகோ, நீங்களா? எப்பொழுது வந்தீர்கள்? சௌக்கியந்தானே?" என்று விசாரித்தான்.

"என்னை உனக்கு ஞாபகமிருக்கிறதா?"

"நன்றாய்ச் சொன்னீர்கள்! ஞாபகமில்லாமல் என்ன? நாம் அன்றொரு நாள் கான்பூரில் வெகு நேரம் தோட்டத்தில் உட்கார்ந்து பேசிக் கொண்டிருக்கவில்லையா?" என்றான் நந்தராம்.

"தேவலையே! நன்றாக ஞாபகம் வைத்துக்கொண்டிருக்கிறாயே!" என்று சொன்னவாறே விராஜகிசோர் ராமநாதபாபு கொடுத்த கடிதத்தை எடுத்து நந்தராமின் கையில் கொடுத்தார். நந்தராம் தன் தந்தையும் கேட்கட்டும் என்று கடிதத்தை உரக்கப் படித்தான்:—

அன்புள்ள நந்தராமுக்கு,

நமஸ்காரம். நான் இன்றுதான் மீண்டும் கான்பூருக்கு வந்திருக்கிறேன். என் நண்பர் பாபு விராஜகிசோர் உன்னுடைய கிராமத்துக்கு வேட்டையாடுவதற்காக வருகிறார். அவருக்கு வேண்டிய வசதிகள் செய்து கொடுத்து, என்னைக் கௌரவிக்கக் கோருகிறேன்.

மற்றபடி இங்கு எல்லாரும் சௌக்கியம். உன் அப்பா, அம்மாவுக்கு என் வணக்கத்தைத் தெரிவி. சம்பா, ஜஸ்லோவை ரொம்பவும் விசாரித்தாள்.

இப்படிக்கு,
ராமநாத பாபு.


கடிதத்தைப் படித்து முடித்த பின்னர், "இதற்காக அவரிடமிருந்து கடிதம் வாங்கி வருவானேன்! நான் வேண்டிய வசதி செய்து தரமாட்டேனா?" என்று விராஜகிசோரைப் பார்த்து நந்தராம் கேட்டான்.

"ஒரு வேளை என்னை மறந்திருப்பாயோ என்று எண்ணி வாங்கி வந்தேனே தவிர வேறொன்றுமில்லை."

சிறிது நேரத்திற்குப் பிறகு நந்தராம் விராஜகிசோரை முன்பு ராமநாதபாபு தங்கியிருந்த அறைக்கே அழைத்துச் சென்றான். விராஜகிசோர் ஒரு முறை அறையைச் சுற்றிப் பார்த்து விட்டு, "இந்த அறையில் தான் காதல் லீலைகள் வெளிப்பட்டு விட்டன போலும்!" என்று மனத்துள் எண்ணிக் கொண்டார்.

இரவு சாப்பாடு முடிந்த பிறகு ஜமீன்தார் விராஜகிசோரை நோக்கி, "காலைக்கு வேட்டைக்குப் போகிறீர்களா? ஏற்பாடு செய்து விடட்டுமா?" என்று கேட்டார்.

நீங்கள் பிரியப்படும் கறிகளுக்கு டால்டா சுவையளிக்கிறது—மேலும் உங்களுக்கு ஊக்கத்தையும் கொடுக்கிறது!





டால்டாவினல் சமையல்செய்த உணவு பழுதாகாது! எளிதில் ஜீரணமாகின்றதும், விடமின் நிரம்பியதுமான டால்டா, வழக்கமாக உட்கொள்ளும் தின்பண்டங்களைக் கூட அதன் இனிய வாசனையால் ருசியுள்ளதாக்குகிறது—அதனுல் உங்களுக்கு தினமும் சாப்பிடும் உணவுகளின்மேல் சலிப்பு ஏற்படுவதில்லை. டால்டாவினுல் சமையல் செய்யுங்கள். இச்சுத்தமான சமையலுக்குதவும் சாதனத்தின் அரிந்த சத்தைத்தரும் திறமையைக் கொண்டு உங்கள் உணவைச் சீர்படுத்திக் கொள்ளுங்கள். டால்டா சமையலுக்குகந்த சாதாரண வஸ்து அன்று என்பது ஞாபகமிருக்கட்டும்—அது குடும்பங்களை ஆரோக்கியமுடையதாகச் செய்யும்; அவர்களுக்கு அதிகப்படியான ஊக்கத்தையும் அளிக்கும்.

* ஆங்கிலத்தில் மட்டும் எழுதப்பட்டுள்ள டால்டா சமையல் புத்தகத்தின் உதவியுடன் உங்கள் சாப்பாட்டுத் திட்டத்தை அமையுங்கள். சத்தைத் தரும் திறமைக்கென ஆராய்ந்தெடுத்த சுவையுள்ள 150-க்கு மேற்பட்ட இந்தியத் தின்பண்டங்களைப் பக்குவம் செய்யும் முறைகள் இதில் அடங்கியிருக்கின்றன. உங்கள் புத்தகத்திற்கு Dept. B461 P.O. Box No. 353, Bombay, என்ற விலாசத்திற்கு காலணு ஸ்டாம்பு அனுப்புங்கள்.

HVM. 40-53 TM THE HINDUSTAN VANASPATI MANUFACTURING CO., LTD.

விரஜகிசோர் ஒரு கணம் யோசித்து விட்டு, "இல்லை, ரயிலில் வந்தது சிரமமாயிருக்கிறது. காலை கழித்துப் போனால் போச்சு!" என்றார்.

சிறிது நேரம் எல்லாரும் பேசிக்கொண்டிருந்து விட்டுப் படுக்கைக்குச் சென்றனர். மறுநாள் காலை எழுந்து தேத் தண்ணீர் அருந்திய பிறகு நந்தராமிடம், "வாயேன், கொஞ்ச தூரம் உலாவி விட்டு வருவோம்!" என்றார் விரஜகிசோர்.

இருவரும் உலாவப் புறப்பட்டனர். வழியில் போகிறவர்கள் எல்லாரும் நந்தராமைக் கண்டு பயபக்தியுடன் வணங்குவதைக் கண்ட விரஜகிசோர், "இவன் நேற்றுப் பிச்சை வாங்கிக்கொண்டு திரிந்தவன்! இன்று எப்படி இருக்கிறான்! கடவுளின் திருவிளையாட்டை என்னவென்று சொல்வது?" என்று மனத்துள் எண்ணிக் கொண்டார்.

கிராமத்து எல்லையைத் தாண்டிக் கொஞ்ச தூரம் சென்றதும் விரஜகிசோர் நந்தராமிடம், "நந்து, நான் உண்மையில் வேட்டைக்காக இங்கே வரவில்லை. வேறொரு காரியத்தை உத்தேசித்து வந்திருக்கிறேன்!" என்றார்.

இதைக் கேட்ட நந்தராம் அளவில்லாத வியப்புடன் அவரை ஏற இறங்கப் பார்த்து விட்டு, "என்ன!" என்றான்.

"உண்மையில் ஒரு விஷயம் கேட்பதற்காக ராமநாதபாபு என்னை இங்கே அனுப்பினார். உன் அப்பா தவறாக எடுத்துக்கொள்ளாமல் இருக்க வேண்டுமே என்பதற்காகத்தான் அந்த மாதிரி சாக்குச்சொன்னேன். உன்னை உலாவக் கூப்பிட்டதும் அந்தச் சமாசாரத்தைப் பற்றிப் பேசுவதற்காகவேதான்!" என்றார் விரஜகிசோர்.

"அப்படியா! அதோ இருக்கும் கிணற்று மேடைக்கு வாருங்கள். போய் உட்கார்ந்து கொண்டு பேசுவோம்" என்று விரஜகிசோரை அழைத்துச் சென்றான் நந்தராம்.

விரஜகிசோர் கிணற்று மேடையில் உட்கார்ந்த பின்னர், "ராமநாதபாபுவின் கல்யாணத்தைப் பற்றிப் பேச்சு வார்த்தை நடந்துகொண்டிருக்கிறது. ஆனால் அவரோ உன் பெண்ணைத் தவிர வேறு யாரையும் கல்யாணம் செய்துகொள்ள விரும்பவில்லை. அந்தக் காலத்தில் உன்னுடைய நிலைமை இருந்தது போலவே இன்று அவருடைய நிலைமையும் இருக்கிறது. உன் வாழ்க்கையிலேயே இது மாதிரிச் சம்பவம் நடந்திருக்கும்பொழுது இதைப் பற்றி உனக்கு ஒன்றும் அதிகமாக நான் சொல்லத் தேவையில்லை" என்றார்.



"அது சரிதான்; இருந்தாலும் சாதி விட்டுச் சாதி எப்படிக் கல்யாணம் செய்வது?"

"இரண்டு பேரும் ஒரே சாதிதானே! ஏதோ சிறு வகுப்பு வித்தியாசம் இருக்கிறதே தவிர வேறொன்றுமில்லையே!"

"இருந்தாலும் இதுவரை அந்தப் பழக்கம் இல்லை, பாருங்கள்! ராமநாதபாபு என் சாதியினராக இருந்து விட்டால் எனக்கு எவ்வித ஆட்சேபணையும் இருக்க முடியாது. நான் சந்தோஷத்துடன் ஏற்றுக்கொண்டு விடுவேன். என் அப்பாவும் சந்தோஷத்துடன் ஒத்துக்கொண்டு விடுவார். ஆனால்



இப்படி வகுப்பு வித்தியாசம் இருக்கும் பொழுது அவர் சம்மதிக்கவே மாட்டார். இந்த நிலையில் நான் என்ன செய்ய முடியும்?"

"ராமநாதபாபுவின் அப்பா மட்டும் ஒத்துக் கொள்வாரா, என்ன? அங்கும் இந்தச் சிரமம் இருக்கத்தான் இருக்கிறது."

"அப்படி யிருக்கும்பொழுது இதைப் பற்றிப் பேசி என்ன பயன்?"

"இல்லை, நீ சற்று யோசித்துப் பார்க்க வேண்டும். ஜுல்லோவுக்கும் ராமநாத பாபுவுக்கும் கல்யாணம் ஆனால்தான் அவர்கள் இருவரும் சுகமாயிருக்க முடியும். இல்லை யென்றால் இருவருடைய வாழ்க்கையும் வீணாகிவிடும். அவர்களுடைய வாழ்க்கையைக் கெடுப்பது நமக்கு உகந்ததா? நீ ஜோனுவைக் கல்யாணம் செய்து கொள்ளாமல் இருந்திருந்தால் உன்னுடைய வாழ்க்கை எப்படி இருந்திருக்கும், சற்று நிதானித்துப் பார்! அதே மாதிரிதானே அவர்களுடைய வாழ்க்கையும்? அவர்களைப் பிரித்து ஏன் கஷ்டத்திற்கு உள்ளாக்க வேண்டும்? நீ இந்த இரண்டு பேருக்கும் ரகசியமாகக் கல்யாணம் செய்து வைக்கச் சம்மதித்தால்தான் அவர்கள் சுகித்திருக்க முடியும். இல்லா விட்டால்......"

"ஆமாம், கல்யாணம் ஆனபிறகு?"

"அப்புறம் யார் என்ன செய்யக் கிடக்கிறது? இதுதான் பிராப்தம் என்று பேசாமல் இருந்துவிடப் போகிறார்கள்!"

நந்தராம் தலை குனிந்தவாறு சிறிது நேரம் யோசித்தான். கடைசியில், "பாபுஜி! இவ்வளவு நாள் நான் என் தகப்பனாருக்கு அளித்த கஷ்டங்கள் போதாதா? இன்னமும் துயரம் அளிக்க வேண்டுமா? முடியாது; இனி என்னால் முடியாது!" என்றான்.

"அது சரிதான். இருந்தாலும் பெண்ணின் சுக துக்கத்தையும் நீ கவனிக்க வேண்டும் அல்லவா? உன் பெண் வேறு ஒருவனுடன் சுகித்திருப்பாள் என்று உனக்கு நம்பிக்கை யிருக்குமாகில், ராமநாத பாபுவுக்கு அவளைக் கல்யாணம் செய்து வை என்று நானே சொல்ல மாட்டேன். ஆனால் உன் பெண் அப்படிச் சுகித்திருக்க மாட்டாள் என்று தோன்றினால் அது யோசிக்க வேண்டிய விஷயம் அல்லவா?"

"ராமநாத பாபுவை அவள் விரும்புகிறாளா, இல்லையா என்ற உள்ளந்தரங்கம் எனக்குச் சரியாகத் தெரியாது. ஆனால் ராமநாத பாபுவின் பேரில் அவள் மிகவும் மரியாதையும் மதிப்பும் வைத்திருக்கிறாள் என்பது மட்டும் நன்றாகத் தெரிகிறது. அவரை விட்டால் அவளுக்குச் சுகமில்லை என்ற நிலைமையில் இருக்கிறாளா என்பது எனக்குத் தெரியாது!"

"இதை நீ சுலபமாகத் தெரிந்துகொண்டு விடலாமே?"

"எப்படித் தெரிந்து கொள்வது? அவளைப் போய் நானே கேட்பதா?"

"கேட்பானேன்! 'ராமநாத பாபுவுக்குக் கல்யாணம் ஆகப்போகிறதாம்' என்று சொல்லு. அவள் முகபாவத்தைப் பார்த்துத் தானாகத் தெரிந்துகொண்டு விடலாம்."

நந்தராம் சிறிது யோசித்துவிட்டு, "சரி, பார்க்கிறேன். ஆனால் எனக்கு என் அப்பா அம்மாவுக்குத் தெரியாமல் மறைத்துக் கல்யாணம் செய்வதற்குச் சிறிதும் இஷ்டமில்லை. அப்படிச் செய்வதால் கெடுதல் தான் ஏற்படுகிறது. ராமநாத பாபுவிடமும் நீங்கள் இதைச் சொல்லுங்கள்!" என்றான்.

"நந்தராம் சொல்வது உண்மைதான். ராமநாத பாபுவின் வார்த்தையைக் கேட்டு இவ்வளவு தூரம் வந்தேனே!" என்று மனத்துள் எண்ணியவராய் விராஜகிசோர், "நான் இதையெல்லாம் முன்பே ராமநாத பாபுவிடம் சொல்லிவிட்டேன். ஆனால் அவர் கேட்கவில்லை. அவர் விருப்பப்படி உன்னிடமும் சொல்லவேண்டியதைச் சொல்லி விட்டேன். இனி உன் இஷ்டம். நீ சொல்வதை நான் அவரிடம் போய்ச் சொல்லிவிடுகிறேன்!" என்றார் விராஜகிசோர்.

"அப்பா, அம்மாவின் அனுமதியில்லாமல் நான் ஒன்றும் செய்வதற்கில்லை என்று சொல்லிவிடுங்கள்."

"சரி, அப்படியானால் உன் பெண் ஜஸ்ஸோவின் மனப் போக்கைப் பொருட்படுத்தப் போவதில்லையா, நீ?"

"ஜஸ்ஸோவின் மனப்போக்கையா? அவள் இஷ்டத்திற்கு விரோதமாக நான் எதுவும் செய்யவே மாட்டேன். ஆனால், இது மட்டும் நிச்சயம். ஜஸ்ஸோ இது மாதிரித் திருட்டுக் கல்யாணத்தை ஒரு போதும் விரும்பவே மாட்டாள்."

"சரி, அப்படியானால் இதைப் பற்றி நான் வேறு ஒன்றும் சொல்வதற்கில்லை."

"எனக்கு ஜஸ்ஸோவின் சுபாவம் தெரியாதா, என்ன? இருந்தாலும் நீங்கள் சொல்வது போல் அவளுடைய மனதைத் தெரிந்துகொள்ள இன்னுமொரு தடவை வேண்டுமானால் முயற்சி செய்து பார்க்கிறேன்."

"ஆம்; எனக்கும் அதுதான் சரியாகப் படுகிறது."

"அவளிடம் ஒன்றையும் மறைக்காமல் ராமநாத பாபுவின் அபிப்பிராயத்தைத் தெரிவித்துவிடுகிறேன். அவள் என்ன சொல்கிறாள் பார்ப்போம். அவள் அறிவு வந்தது முதலே ஆற அமர யோசித்துப் பதில் சொல்பவள். தப்பான வழியில் செல்ல மாட்டாள்."

விராஜகிசோர் ஆச்சரியத்துடன் நந்தராமைப் பார்த்துச் சிரித்தவாறு, "அவள் மனதைத் திறந்து இந்த விஷயத்தில் எப்படி அபிப்பிராயம் சொல்லுவாள்? அதெல்லாம் உன் பொறுப்பிலேயேதான் விட்டுவிடுவாள்" என்றார்.

"ஜஸ்ஸோவா! அதெல்லாம் மாட்டாள். உள்ளதை ஒளிக்காமல் வெளியிடுவாள். அவள் ரொம்பப் புத்திசாலி! எனக்குத் தெரியாதா, அவள் சுபாவம்!" என்றான் நந்தராம்.

"சரி, கேட்டுச் சொல்!" என்று சொல்லியவாறே விராஜகிசோர் எழுந்தார்.

23

அன்று இரவு நந்தராம் யசோதாவைத் தன்னருகில் அழைத்து, "ஜஸ்ஸோ, நேற்று வந்திருக்கிறாரே அவர் ராமநாத பாபுவின் சிநேகிதர். உனக்குத் தெரியுமோ, இல்லையோ?" என்று கேட்டான்.

"தெரியுமே!"

"அவர் எதற்காக வந்திருக்கிறார், தெரியுமா?"

"வேட்டையாட!"

"இல்லை; ராமநாத பாபு ஒரு விஷயமாக அவரை அனுப்பியிருக்கிறார்."

யசோதாவின் இதயம் துடித்தது. அவள் தன் மனத் துடிப்பை ஒருவாறு அடக்கிக்கொண்டு, "என்ன விசேஷம்?" என்று கேட்டாள்.

"ராமநாத பாபுவின் அப்பா அவருக்குக் கல்யாணம் செய்து வைக்கப்போகிறாராம்."

இந்த வாக்கியத்தைக் கேட்டதும் யசோதாவின் முகம் வாடியது.

"அது சம்பந்தமாக உன்னிடம் ஒரு யோசனை கேட்க விரும்புகிறேன். ஒரு தகப்பன் தன் பெண்ணினிடத்தில் இந்த விஷயத்தைப் பற்றிக் கேட்பது உசிதமில்லைதான். இருந்தாலும் உன் சுகதுக்கத்தைக் கவனிக்க வேண்டியது என் பொறுப்பல்லவா? ஆகையால் உன்னுடைய இஷ்டத்துக்கு மாறாக நான் எதையும் செய்ய விரும்பவில்லை. அதனால்தான் கேட்கிறேன்."

"என்ன அப்பா, விஷயம்? சொல்லுங்கள்!" என்றாள் யசோதா.

"நந்தராம் சம்மதித்தால் நான் ஜஸ்லோவைக் கல்யாணம் செய்துகொள்ளத் தயார் என்று ராமநாத பாபு சொல்லி அனுப்பியிருக்கிறார். எனக்கு எவ்வித ஆட்சேபணையும் இல்லை. ஆனால் சாதி விட்டுச் சாதி கல்யாணம் செய்வது எப்படி என்பதுதான் புரியவில்லை. இதற்கு நான் சம்மதித்துவிட்டால் மட்டும் போதுமா? உன் தாத்தா சம்மதிக்க வேண்டாமா? ராமநாத பாபுவின் அப்பாவுக்கும் இது பிடிக்காது. ஆகையால் ஒருவருக்கும் தெரியாமல் கல்யாணத்தைச் செய்துவிடலாம் என்று ராமநாத பாபு அபிப்பிராயப்படுகிறாராம். அவர் செய்த உபகாரங்களின் காரணமாகத்தான் நாம் இந்த நிலைக்கு வந்திருக்கிறோம். அவருடைய மனதிற்கு வருத்தம் அளிப்பது நமக்கு உகந்ததல்ல. இருந்தாலும் திருட்டுக் கல்யாணம் செய்வது சரியா? அப்படிச் செய்தால் உன் தாத்தா, பாட்டிக்கு எவ்வளவு வருத்தமாயிருக்கும், தெரியுமா? அவர்களுடைய மனதிற்கு வருத்தம் அளிக்க எனக்குத் துணிவு இல்லை. விராஜகிசோர் பாபு இதைக் கேட்டுப் போவதற்காகத்தான் வந்திருக்கிறார். அவருக்கு நான் என்ன சொல்லியனுப்புவது?"

யசோதராவுக்குத் தன் தந்தை இப்படி வெளிப்படையாக அபிப்பிராயம் கேட்பார் என்ற எண்ணமே உதிக்கவில்லை. இதைக் கேட்ட அவளுக்கு வியப்புத் தாங்கவில்லை. அடுத்த கணம், "நமது சுக துக்கத்தை எண்ணித்தானே அவர் இப்படிக்கேட்கிறார்? அவருக்கு நம்மீது எவ்வளவு வாஞ்சை!" என்ற எண்ணம் உதித்ததும் அவளுக்குத் தன் தந்தையின்மீது அளவற்ற அன்பும் சிரத்தையும் ஏற்பட்டது. கண்ணீர் மல்கிய கண்களுடன் தழுதழுத்த குரலில், "அப்பா! என்னிடம் கேட்பானேன்! உங்கள் மனதுக்குப் பிடித்தமானதைச் செய்யுங்கள். என்னைப் பற்றிய கவலையை விட்டுவிடுங்கள். உங்களுக்கு மகிழ்ச்சி அளிக்கக் கூடிய விஷயங்கள் எல்லாம் எனக்கும் மகிழ்ச்சி தரக் கூடியவை. நீங்கள் கஷ்டப்பட்டால் எனக்குச் சுகமேது?" என்றாள்.

இதைக் கேட்ட நந்தராம், "எனக்கு என்ன அம்மா சுகம் வேண்டிக் கிடக்கிறது? நீ சுகப்பட்டால் எனக்கும் சுகமே! உனக்காக நான் எந்தக் கஷ்டத்தையும் அனுபவிக்கத் தயார். என் சுகம் எல்லாம் உன் அம்மாவுடனேயே போய்விட்டது. அவள் உயிருடன் இருந்த வரையில் பட்ட கஷ்டங்களுக்கு ஓர் எல்லையில்லை. நினைத்தாலே ரொம்ப சிரமமாயிருக்கிறது" என்றான்.

அவனுடைய கண்களிலிருந்து கண்ணீர் வழிந்தோடியது. யசோதராவின் கண்களும் தாயின் நினைவு வந்ததும் கண்ணீரைச் சிந்தின.

சிறிது நேரம் கழித்து நந்தராம் கண்ணீரைத் துடைத்துக் கொண்டு, "அம்மா, நீதான் எனக்கு எல்லாம். உன் சுகத்துக்காக நான் எந்தக் கஷ்டத்தையும் அனுபவிக்கத் தயார்! நீ உன் மனதில் உள்ளதை ஒளிக்காமல் சொல்லு!" என்றான்.

"நான் என்ன சொல்ல? உங்கள் சொற்படி நான் நடக்கிறேன்."

"விராஜகிசோர் பாபுவிடம் என்ன சொல்வது?"

"ஒளிவு மறைவாக ஏதும் செய்வதற்கில்லை என்று சொல்லிவிடுங்கள்."

"நானும் அதுதான் எண்ணினேன். நேர்வழிதான் எப்பொழுதும் சரி. என்ன, நான் சொல்வது?"

"ஆமாம், அப்பா!" என்று கூறி யசோதரா அங்கிருந்து சென்றுவிட்டாள்.

நந்தராம் தன் மனத்துள், "என் ஜஸ்லோ ரொம்ப கெட்டிக்காரி என்று நான்தான் அப்பொழுதே சொல்லி விட்டேனே! இந்தச் சின்ன வயதிலே என்ன அறிவு, அவளுக்கு! ராமநாத பாபு, ஜஸ்லோ தன்னை ரகசியமாகக் கல்யாணம் செய்து கொள்ளச் சம்மதித்து விடுவாள் என்று எண்ணிக் கொண்டிருப்பார். பிச்சைக்காரப் பெண்தானே, தன்னுடைய வேண்டுகோளுக்கு உடனே சம்மதித்து விடுவாள் என்ற எண்ணம் போலும்! என்ன மடத்தனம்! ஜஸ்லோ தன்னைக் காதலிப்பதாகவும், தன்னைத் தவிர வேறு யாரையும் கல்யாணம் செய்து கொள்ள மாட்டாள் என்றும் சொன்னாரே! என்ன ஏமாற்றம்! அப்படியிருந்தால் இப்படியா ஜஸ்லோ பதில் சொல்வாள்! அவள் ஒன்றும் அவரைக் காதலிக்கவில்லை. அவர் செய்த உபகாரத்தை எண்ணி அவரிடம் மரியாதையும் மதிப்பும் வைத்திருக்கிறாள். அதை அவர் காதல் என்று எண்ணிவிட்டார்! அந்த எண்ணம் இனி மறைந்துவிடும். மனுஷ்யன் நல்லவர்தான். முடிந்தால் அவருக்கே ஜஸ்லோவைக் கல்யாணம் செய்து கொடுத்து விடலாம். ஆனால் அப்பா சம்மதிக்க மாட்டாரே! அது மட்டுமில்லை, ராமநாத பாபுவின் அப்பாவும் கூடச் சம்மதிக்க மாட்டார்! என்ன செய்வது?" என்று எண்ணலானான்.

(தொடரும்)

பரம ரகசியம்

ஸோமாஸ்

கலியுகக் குபேரனைக் காண வேண்டுமானால் மிஸ்டர் சுதர்சனத்தினிடம் நிதர்சனமாகக் காணலாம். கணக்கு வழக்கில்லாத சொத்து இருந்தது அவனுக்கு; அதே மாதிரி கணக்கு வழக்கு இல்லாத செலவும் இருந்தது!

ஒரு புதிய சினிமாப் படமோ, நாடகமோ, பிரபல சங்கீதக் கச்சேரியோ நடக்கிறது என்றால் அன்றைய தினம் கையில் நிதியற்ற ரஸிகர்களுக்கெல்லாம் என்னவோ மாதிரியிருக்கும். உணவு செல்லாது; உறக்கம் கொள்ளாது. இப்படிப்பட்ட ரஸிகர்களெல்லாம் எப்படியாவது சுதர்சனத்தைக் 'காதல் புரிந்து' அவன் நட்பைப் பெற்று விட்டால் அவர்களது சோகம் அடியோடு பறந்து போய்விடும். காரணம், அவர்களையெல்லாம் 'தடுத்தாட்கொள்ளும் தயாநிதி'யாகச் சுதர்சனம் விளங்கி வந்ததுதான்!

இப்படி 'ஔதாரித்தன'மாக இருக்கும் வாலிபர்களுக்கெல்லாம் அவர்களது வாழ்க்கையில் ஒரு முட்டுக் கட்டை தோன்றுவதுண்டு. அந்த முட்டுக்கட்டை தான் அவர்களுடைய தகப்பன்மார்கள். மகனின் கண்மூடித்தனமான செலவைப் பார்த்துக் கொண்டு எந்த தகப்பனாரும் சும்மா இருக்கமாட்டார். கண்டித்தும் தண்டித்தும் மகனுடைய செலவைக் கட்டுப்படுத்தி அவனது ஆனந்த வாழ்வைப் பாழாக்கப் பார்ப்பார்!

ஆனால், இந்த விதத்தில் சுதர்சனத்தின் அதிர்ஷ்டம் எந்தப் புத்திர சிகாமணிக்கும் கிட்டியிராது என்பது நிச்சயம். அவனுடைய தகப்பனார் முதுமையடைந்து குடும்ப விவகாரங்களெல்லாம் சுதர்சனத்தின் கைக்கு வந்த பின்புங்கூட மாதம் ஒன்றுக்கு ரூபாய் இரண்டாயிரத்துக்குக் குறையாமல் செலவு செய்து வந்தார்.

சுதர்சனத்துக்குத் தன்னைப்போலவே தன் தகப்பனாரும் மிதமிஞ்சிச் செலவு செய்வது பிடிக்கவில்லை. திடீர் திடீர் என்று அவர் தம் மகனிடம் பெருந் தொகைக்கு அடி போட்டு அவனைத் திணற அடித்து வந்தபோதெல்லாம் சுதர்சனத்துக்கு அவரிடம் ஏற்பட்ட வெறுப்பு கொஞ்ச நஞ்சமல்ல. அறுபதாம் பிராயத்தை எட்டிப் பிடித்தவரானாலும் அவர் ஓர் இளம் வாலிபனைப்போல் நாகரிக உடை உடுத்தி, ஜாருக்காகக் காரில் ஏறிக்கொண்டு வாயு வேகமாகச் சதாகாலமும் எங்கெல்லாமோ போய் வருவார். ஆனால் அவர் எங்கே போகிறார், என்ன செய்கிறார் என்பது மட்டும் பரம ரகசியமாகவே இருந்து வந்தது.

தந்தையும் மகனுமாகச் சேர்ந்து இப்படி 'தாம் தூம்' செலவு செய்ததின் பயனாகச் சுதர்சனத்தின் ராஜபோகம் கொஞ்சம் கொஞ்சமாக ஆட்டங் காண ஆரம்பித்துப் பிரவாகம் வடிந்த நதியைப்போல் அமைதியடைந்து விட்டது. நண்பர்களின் கூட்டமும் குறைந்து வீடு வெறிச்சென்று ஆகிவிட்டது. இந்தச் சமயம் பார்த்து நோய் வாய்ப்பட்டிருந்த சுதர்சனத்தின் தந்தையும் அமைதியான வாழ்வை நாடிச் சென்று விட்டார்.

கையில் இருந்த சொத்தையும் மிஞ்சிக் கடன் ஏற்பட்டிருந்தபடியினால் சுதர்சனத்துக்குத் தன் தகப்பனார்மேல் ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. நாற்காலி, மேஜை, பீரோ முதலிய வீட்டுச் சாமான்களையெல்லாம் விற்றுக் கடனை அடைக்க நேர்ந்தது.

இந்தச் சமயத்தில்தான் அந்த அதிசயச் சம்பவம் — சுதர்சனம் கொஞ்சமும் எதிர்பாராத சம்பவம்—நிகழ்ந்தது. எல்லா மரச் சாமான்களுடன் தன் தகப்பனாரின் பீரோவையும் விற்கும்போது, சுதர்சனம் சாமான்கள் ஏதாவது இருந்தால் எடுத்து விடலாம் என்று அதைத் திறந்து பார்த்தான். பீரோவுக்குள் ஒரு சின்ன பெட்டியிருந்தது. பெட்டியிலிருந்த காகிதக் கட்டுக்களையெல்லாம் பார்த்ததும் சுதர்சனத்துக்குச் சிரிப்பு வந்தது. அப்பாவுக்கு இத்தனை கட்டுரை, கதை எழுதுவதற்கு எப்படி அவகாசம் கிடைத்தது என்ற ஆச்சரியமும் ஒருபுறம் தோன்றியது. அவைகளை முழுவதும் படித்துப் பார்த்ததும் சுதர்சனத்தின் கண்களிலிருந்து கண்ணீர் ஆறாகப் பெருகியது. தகப்பனாரைத் தெய்வம் என்றே நினைத்துக் கைகூப்பினான்.

நியாயம்தானே! அவன் தகப்பனார் அபரிமிதமாகச் செலவு செய்த அவ்வளவு பணமும் சுதர்சனத்தின் பேரில் பாங்கியில் கட்டப்பட்டிருந்தது; பல ஏகரா நிலம் வாங்கி அவன் பெயருக்குச் சாஸனம் செய்து வைக்கப்பட்டிருந்தது. எல்லாம் தம் ஏக புத்திரன் சுதர்சனத்தின் பிற்கால வாழ்க்கைக்கு உதவும் பொருட்டுத்தான்!

என்ன பந்தயம்?

ஸ்ரீமோத்தேயு

பாலசுந்தரத்துக்கு ஒரு வியாதி உண்டு. எந்த விஷயத்திற்கும் பந்தயம் போடுகிற வியாதிதான் அது. "இன்றைக்குக் கணக்கு வாத்தியார் பள்ளிக்கூடத்துக்கு வரமாட்டார்!" என்பான்.

"புத்தகத்தைத் தூக்கிக் கொண்டு பள்ளிக்கூடத்துக்குப் புறப்பட்டாரே!" என்பான் ஒருவன்.

"சரி, பந்தயம் ஓரணா! நான் அவர் வரமாட்டார் என்கிறேன்!" என்பான் பாலு.

கணக்கிலே பூஜ்யம் எடுக்கும் மூன்று பேர்வழிகள் பந்தயம் கட்டுவார்கள். பாலசுந்தரத்துக்கு அன்று மூன்றணா கிடைத்துவிடும்.

பள்ளிக்கூடத்துக்குப் புறப்பட்ட கணக்கு வாத்தியாருக்கு வழியிலே ஏதோ அவசர ஜோலி ஏற்பட்டு, அவர் பாலசுந்தரத்தினிடம் 'லீவ் லெட்டர்' எழுதிக் கொடுத்தார் என்பது யாருக்குத் தெரியும்?

"இன்றைக்கு மழை வரும்போல் இருக்கிறது. 'ட்ரில் கிளாஸ்' இராது!" என்பான் பாலு.

"மழை எங்கே வரப்போகிறது? அப்படியே வந்தாலும் அதுதான் 'ட்ரில் கிளாஸ்' நடக்கப் போகும் சமயத்தில் நின்றுவிடுகிறதே!" என்பான் ஒருவன்.

"அடேய், மழை வந்தாலும் வராவிட்டாலும் இன்றைக்கு 'ட்ரில் கிளாஸ்' இராது. என்ன பந்தயம்?", என்று கேட்பான் பாலு.

"அரையணா!" என்பான் அவன்.

"சரி" என்பான் பாலு. 'ட்ரில் கிளாஸ்' என்றாலே வெறுப்படையும் நாலு பிரகஸ்பதிகள் அவனிடம் பந்தயம் கட்டுவார்கள். பாலசுந்தரத்துக்கு அன்று இரண்டணா கிடைக்கும். ஆனால், "இன்று 'ட்ரில் கிளாஸ்' கிடையாது" என்ற நோட்டீசை எழுதி, ஹெட் மாஸ்டர் பியூனிடம் கொடுத்ததைப் பார்த்த பின்தான் பாலசுந்தரம் பந்தயம் போட்டான் என்பது அந்த அப்பாவிகளுக்குத் தெரியாது!

இவ்வாறு பந்தயம் கட்டிப் பணம் பறிக்காமல் ஒரு நாளையும் கழிக்க மாட்டான் பாலசுந்தரம். பந்தயம் போடுவதற்குரிய பிரச்னையைத் தேடிக் கண்டு பிடிப்பதிலும், அதைச் சாமர்த்தியமாகச் சம்பாஷணையில் புகுத்துவதிலும் பாலுவுக்குத் தனிச் சமர்த்து உண்டு.

இந்த விஷயம் அவன் வகுப்பு வாத்தியாருக்கு எப்படியோ எட்டிவிட்டது. அவர், "பந்தயம் போடுகிற வழக்கத்தை விட்டுவிடு!" என்று அவனை எச்சரித்தார். ஆனாலும் அவன் தன் வழக்கத்தை விடவில்லை. இரண்டு தடவை அடித்தும் பார்த்தார்; பயனில்லை. ஆகவே, அவர் தலைமை ஆசிரியரிடம் புகார் செய்தார்.

அன்று இங்கிலீஷ் பாடம் நடந்து கொண்டிருந்தது. பாலுவை ஹெட் மாஸ்டர் கூப்பிடுவதாகப் பியூன் வந்து சொன்னான். அடுத்த நிமிஷம் தன் அறைக்குள் நுழைந்த பாலசுந்தரத்தைப் புன்சிரிப்புடன் வரவேற்றார் ஹெட் மாஸ்டர்.

"குட்மார்னிங் ஸார்!" என்று அவருக்கு முன்னால் போய் நின்றான் பாலு.

"என்ன, பாலு! எடுத்ததற்கெல்லாம் நீ பந்தயம் போடுகிறாயாமே?"

"சும்மா விளையாட்டுக்கு, ஸார்!"

"விளையாட்டுத்தான் வினையாகும். பந்தயம் போடுகிறதுதான் சூதாட்டத்துக்கு ஆரம்பம்! நளன் சூதாடியதால் தானே நாடு, நகரம், பொன், பொருள் எல்லாவற்றையும் தோற்றான்?"

"நான் பந்தயம் வைத்து ஒரு நாளும் தோற்றதில்லை, ஸார்!"

"சரி, தோற்றுப்போனால் அந்த வழக்கத்தை விட்டுவிடுவாயா?"

"விட்டுவிடுவேன், ஸார்!"

"அப்படியா! இன்று சாயந்திரம் வகுப்பு முடிந்ததும் என்னை வந்து பார்த்துவிட்டுப் போ!" என்றார் ஹெட் மாஸ்டர்.

"வருகிறேன், ஸார்!" என்று சொல்லிவிட்டு வெளியே சென்ற பாலு, மறுபடியும் திரும்பி வந்து, "ஸார்! இந்த எலுமிச்சம் பழ ரசத்தையும் 'ஸ்பிரிட்'டையும் கலந்து பூசினால் எந்தக் கறையும் போய்விடும், ஸார்!" என்றான்.

"என்னடா, உளறுகிறாய்! நான் கறை போறதுக்கு மருந்து சொல்லச் சொன்னேனா, உன்னை!"

"இல்லை, ஸார்! காலையிலே நீங்கள் வீட்டை விட்டுப் புறப்படும்போது உங்கள் கோட்டுப் பின் புறத்திலே மைக் கறையைப் பார்த்தேன், ஸார்!"

"நான் போடும்போது பார்த்துத் தானேடா போட்டேன்?"

"காலணாப் பந்தயம், ஸார்! உங்கள் கோட்டுக்குப் பின்புறத்திலேதான் மைக் கறை இருக்கிறது!" என்று அவரிடமே பந்தயம் வைத்தான் பாலு.

ஹெட்மாஸ்டரும் அவனைத் திருத்துவதற்கு அதுதான் சமயமென்று எண்ணியவராய், "அடேய், வீணாய்ப் பந்தயம் தோற்றுப்போகும்!" என்றார்.

"காலணாத்தானே, ஸார்!" என்றான் பாலு.

"காலணா மட்டும் இல்லையே! நீ தோற்றுப்போனால் இனிமேல் பந்தயம் போடுகிற வழக்கத்தையே அல்லவா விட்டுவிட வேண்டும்? சிறிது நேரத்திற்கு முன்னால் நீ அப்படிச் சொன்னாயோ, இல்லையோ?"

"சொன்னேன், ஸார்!"

"சொன்ன வாக்கைத் தவறக்கூடாது! அதுதான் யோக்கியமான பையனுக்கு அடையாளம்!" என்று சொல்லி, ஹெட்மாஸ்டர் தம் கோட்டைக் கழற்றி மேஜை மீது விரித்தார்; ஒரு கறையாவது இல்லை.

"பார்த்தாயா, பந்தயம் தோற்றுப் போச்சு!" என்றார் ஹெட்மாஸ்டர்.

பாலசுந்தரம் தலையைக் குனிந்து கொண்டு, "எப்படியோ தவறிப் போச்சு, ஸார்!" என்று சொல்லி ஒரு காலணாவை எடுத்து அவருடைய மேஜைமேல் வைத்தான்.

ஹெட்மாஸ்டர் புன்சிரிப்புடன், "இனிமேல் பந்தயம் போடமாட்டாயல்லவா? வகுப்புக்குப் போ!" என்றார்.

ஆனால் பாலசுந்தரம் அதற்காக முகத்தைத் தொங்கப் போட்டுக் கொள்ளவில்லை. குதித்து நடந்து கொண்டே வகுப்புக்கு வந்து தன் உபாத்தியாயரிடம், "ஸார்! நான்தான் ஜெயித்தேன். நீங்கள் எனக்கு நாலணா கொடுத்து விட வேண்டியதுதான்!" என்றான்.

உபாத்தியாயர், "நிஜமாகவா?" என்று கேட்டார்.

"நீங்களே போய் ஹெட்மாஸ்டரிடம் கேட்டுக் கொள்ளுங்கள்!" என்றான் பாலு.

உபாத்தியாயர் ஹெட்மாஸ்டர் அறைக்கு வந்தார்.

"உங்கள் பாலு இனிமேல் பந்தயம் போடுகிற வழக்கத்தை விட்டு விடுவான்!" என்றார் ஹெட்மாஸ்டர்.

"என்ன, தண்டனை அவ்வளவு பலமோ?" என்று கேட்டார் வாத்தியார்.

"தண்டனையெல்லாம் இந்தக் காலத்துப் பையன்களுக்கு ஒத்துக்கொள்ளாது! அவர்களுடைய மனோநிலையை அறிந்து அதற்கேற்ப நாம் நடந்துகொள்ள வேண்டும்......"

"நீங்கள் என்ன செய்தீர்கள்?"

"இதுவரை பந்தயம் வைத்து அவன் தோற்றதேயில்லையாம். என்றைக்காவது தோற்றுப் போனால் அன்று முதல் அந்த வழக்கத்தை விட்டு விடுவதாகச் சொன்னான்......"

"சரி, அப்புறம்?"

"என்னிடமே ஒரு பந்தயம் போட்டான்......!"

"உங்களிடமா! என்ன பந்தயம்?"

"'என் கோட்டுப் பின்புறத்திலே மைக் கறை இருக்கிறது' என்றான். 'இல்லை' என்றேன். 'இருக்கிறது ஸார், காலணாப் பந்தயம்!' என்றான். கோட்டைக் கழற்றி மேஜையின்மீது விரித்தேன். அதில் ஒரு கறையும் கிடையாது. பந்தயம் தோற்றுப் போச்சு! காலணாவைக் கொடுத்துவிட்டு, 'இனிமேல் பந்தயம் போடமாட்டேன், ஸார்!' என்று சொல்லி விட்டுப் போனான்!"

"அட, பாவி!—அவன் உங்களையே ஏமாற்றிவிட்டான், ஸார்!"

"ஏன், என்ன விஷயம்?"

"உங்களிடம் வருவதற்கு முன்னால் அவன் என்னிடம், 'ஹெட்மாஸ்டர் தம்முடைய கோட்டைக் கழற்றும்படிச் செய்து விடுகிறேன்; நாலணாப் பந்தயம்!' என்று சொல்லிவிட்டு வந்தான்; அவன் சொன்னபடியே செய்தும் விட்டான்!" என்றார் உபாத்தியாயர்.





Edited, Printed and Published by R. Krishnamurthy at the "Kalki" Press
116-119, Sladens Garden, Poonamalle High Road, Kilpauk, Madras.

கல்கி



KALKI அக்டோபர் 27, 1946 4 அணா

REGD. NO. M. 4392

